# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 21 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.15

## எதிர்வரும் 2024 சனவரி 6 அன்று சென்னையில்..

# பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாடு

மாநாட்டின் முழக்கங்கள்:

- பார்ப்பனிய மதவெறி கொண்ட பாசிச பாஜகவை வீழ்த்துவோம்!
- அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டு மூலதனங்களை விரட்டியடிப்போம்!
- தேசிய இனங்களின் தனி அரசை அமைத்துக் கொள்ளும் உரிமைக்குப் போராடுவோம்!
- மக்களவையைக் கலைத்துச் சம உரிமை கொண்ட தேசங்களின்(மாநிலங்களின்) ஒன்றியத்தை உருவாக்குவோம்!
- ஆளுநர் என்கிற அதிகார அமைப்பை ஒழிப்போம்!

**அனைவரையும் பங்கேற்க அழைக்கிறது**

**தமிழக மக்கள் முன்னணி**

# தமிழ்நாடு நாள் விழாவும்..
# தமிழ்நாட்டுக் கொடியும்..
# தமிழ்நாடு அரசு அறிவிப்பது எப்போது?

=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=

**தமிழ்நாடு நம் நாடு!**
**தாயக நாளைக் கொண்டாடு!**

=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=

**நவம்பர் 1 ஆம் நாளைத்**
**தமிழ்நாடு விழாவாகக் கொண்டாடுவோம்!**

=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=•=

நவம்பர் ஒன்றாம் நாளைத் தாயக நாளாக அறிவித்து 25.10.2019 அன்று அரசாணை வெளியிட்டு, 01.11.2019-இல் தமிழ்நாடு அரசே விழா எடுத்துக் கொண்டாடியது.

அதைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பும் தமிழ் உணர்வாளர்கள், தமிழ் அமைப்பினர் அனைவரும் வரவேற்றுப் பாராட்டினர்.

01.11.2020-இல் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்நாடு அளாவிய பெருவிழாவாக எடுக்க முடிவெடுத்து, அத் தகவலை அரசுக்கும் முறையாகத் தெரிவித்து, நவம்பர் முதல் நாளைப் பொது விடுமுறை நாளாக அறிவிக்கவும், தமிழ்நாட்டுக்கென ஒரு கொடியை அறிவிக்கவும் கோரிக்கை வைத்திருந்தது.

மாநிலங்களுக்குத் தனி இலச்சினைகள் இருப்பதுபோல், தனிக்கொடி வைத்துக்கொள்வதை இந்திய அரசியலமைப்புச்சட்டம் மறுக்கவில்லை. எனவே, தமிழ்நாடு அரசே ஒரு கொடியை அறிவிக்கிறவரை பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு தமிழ்நாட்டின் வரைபடத்தைக்கொண்ட ஒரு கொடியினை முன்மொழிந்ததொடு, தமிழ்நாடு அரசு இதே கொடியையோ, எல்லோரும் ஏற்கத் தகுந்த வேறொரு கொடியையோ அதிகார அளவில் அறிவிப்பின் அதையே வரவேற்றுப் பின்பற்றுவோம் என்றும் உறுதியளித்தது.

அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் எடப்பாடி அவர்களும் 31.10.2020 அன்று தமிழ்நாடு நாள் வாழ்த்துச் செய்திவெளியிட்டு, நவம்பர் முதல்நாளை எல்லோரும் கொண்டாடச்சொல்லி அறிவித்திருந்தார். தமிழ்நாடு முழுவதும் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்த நிலையில், கொடி ஏற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் திடுமெனக் கூறி, 31.10.2020 மாலையிலிருந்தே நாடெங்கும் உள்ள பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் உறுப்பியக்கப் பொறுப்பாளர்களை யெல்லாம் தேடித்தேடிக் காவல் துறையினர் கொடியேற்றக் கூடாது எனும் அறிவிப்பை இரவோடு இரவாகக் கொடுத்துச்சென்றனர். அந்த இரண்டடித் துணி இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானதாம். தமிழ்நாடு படம் உள்ள அந்தக் கொடி இந்தியாவைத் துண்டாடிச் சிதைத்துவிடுமாம். கொடி ஏற்றினால் 124-ஏ தடைச்சட்டம் பாயும் எனத் தமிழ்நாடு முழுதும் விழா ஒருங்கிணைப்பாளர்களுக்குக் கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்துக் காவல்துறையின் மூலம் அடக்குமுறைகளை ஏவியது, பாசக-வின் ஏவலாளியாக இருந்த அதிமுக அரசு.

காவல்துறை அறிவிப்புக்குக் கட்டுப்பட்டுப் பொதுவெளியில் கொடியை ஏற்றாத நிலையிலும் சென்னை, மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க்களத்தில் அத்துமீறிப் புகுந்து பதாகைகளையும் கொடிகளையும் பறித்துச்சென்றதுடன், விழா ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் அவர்களையும், தோழர் தம்பி மண்டேலா-வையும் அதேபோல் கொடியேந்தியபடி இனிப்பு மட்டுமே வழங்கிய வடசென்னைத் தோழர்கள் 13 பேர் மற்றும் பட்டாபிராம் பகுதித் தோழர்கள் 6 பேர் என 21 பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்புத் தோழர்களையும், மற்ற பல்வேறு அமைப்புகளின் தோழர்களையும் தாயகநாள் விழா கொண்டாடியதற்காகத் தளைப்படுத்தி கொடுஞ் சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து சிறையிலடைத்தது..

மீண்டும் அடுத்த ஆண்டு 2021 நவம்பர் ஒன்றாம் நாளுக்கு முன்பாக மிகப் பெரும் அளவில் திட்டமிட்டுத் தமிழ்நாட்டு அரசுக்கு மீண்டும் கோரிக்கை வைத்துப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பினர் தமிழ்நாடு நாள் விழாவை மிகப் பெரும் அளவில் கொண்டாடிட வலியுறுத்தினர்..

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பினர் மட்டுமின்றி




மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, இந்திய சமூக சனநாயக கட்சி (எஸ் டி பி ஐ), பச்சைத் தமிழகம் கட்சி உள்ளிட்ட கட்சியினரும் எண்ணற்ற இயக்கங்களைச் சார்ந்தவர்களும் வலியுறுத்தினர்..

ஆனாலும், பொறுப்பேற்றிருந்த திமுக அரசு, சூலை 18-ஆம் நாளைத் தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்ட நாளாக ஏற்று அதையே தமிழ்நாடு நாள் விழாவாக அறிவித்தது..

அதேபோது அதை அரசு விழா என்ற அளவில் ஓரிடத்தில் மட்டும் நிகழ்ச்சியை நடத்திவிட்டு முடித்துக் கொண்டது..

கர்நாடகாவில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து.. கர்நாடக அரசு விழா - என்கிற பெயரில் கர்நாடகத்திற்கெனத் தனிக் கொடியேற்றி, இலச்சினை அமைத்து முழு அரசு மரியாதையோடு கருநாடக முதலமைச்சரே கர்நாடக தேசியக் கொடியேற்றிட கர்நாடகம் முழுமையும் கொண்டாடுகின்றனர்..

அன்றைய நாள் கர்நாடக எங்கும் கர்நாடகத் தேசியக் கொடியாக அந்தக் கொடியே பறக்கிறது.. கருநாடக பா.ச.க ஆனாலும்.. கருநாடகக் காங்கிரசு கட்சியானாலும் கருநாடக விழாவை மிகப் பெரும் அளவில் முன்னெடுத்து கொண்டாடுகின்றன..

ஆனால் தமிழ்நாட்டு அரசு அந்த அளவில் ஒரு கொடியை உருவாக்கி அறிவிக்கக்கூடவில்லை என்பதும், தமிழ்நாடு நாள் விழாவைத் தமிழ்நாட்டுத் தேசிய விழாவாகக் கொண்டாடவில்லை என்பதும் மிகப்பெரிய அவலம் என்பதோடு திமுக அரசு அதில் அக்கறையற்று இருப்பதைச் சுட்டிக் காட்டவும் கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது..

சூலை 18-ஆம் நாள் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்ட நாளாகக் கொண்டாடுவதிலோ அரசு விழாவாக அறிவிப்பதிலோ நமக்கும் உடன்பாடே..

அதேபோது குமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்ட நாளாகவும், மொழி வழி மாநிலங்கள் உறுதி செய்யப்பட்டு இறுதியாக தமிழ்நாடு என்று அரசு அதிகாரம் பெற்ற ஒரு நாளாகவும் நவம்பர் ஒன்றாம் நாள் ஏற்கப்பட்டுத் தொடர்ந்து பல பத்தாண்டுகளாகத் தமிழ் இயக்கங்களால் விழா கொண்டாடப்பட்டு வருகிற நிலையில் நவம்பர் ஒன்றையே தமிழ்நாடு நாள் விழாவாகத் தமிழ்நாடு அரசு அறிவித்தாக வேண்டும்.. எனத் தொடர்ந்து வலியுறுத்துவோம்..

அதுவரை இயக்கங்கள் அனைத்தும் உணர்வாளர்கள் அனைவரும் ஆங்காங்கே தமிழ்நாடு நாள் விழாவை மக்களுக்கு இனிப்பு கொடுத்து மக்கள் விழாவாகக் கொண்டாடுவோம்..

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு 100க்கும் மேலான அமைப்புகளுடன் கலந்து பேசி இறுதிப்படுத்தியிருக்கிற தமிழ்நாடு கொடியையே, (தமிழ்நாடு அரசு தனி கொடியாக அறிவிக்கும் வரை) தமிழ்நாட்டின் கொடியாக ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு எங்கும் அறிமுகப்படுத்துவோம்! கொண்டாடுவோம்!

====================

தமிழ்நாடு நம் நாடு!

தாயக நாளைக் கொண்டாடு!

====================

# பாலசுதீனத்தில் நடப்பது ஒட்டு மொத்த இன அழிப்பு! உலகத் தலைவர்கள் உடனே போரை நிறுத்த வேண்டும்!

● பேராசிரியர் **த. செயராமன்** தமிழ்மண் தன்னுரிமை இயக்கம் ●

'இசுரேலிய இனவெறி அரசு பாலசுதீனியர்களை இன அழிப்பு செய்கிறது. உலகத் தலைவர்கள் உடனடியாக தலையிட்டுப் போரை நிறுத்தவேண்டும். பாலசுதீனத்தில் இருந்து இசுரேலியப் படைகளால் வெளியேற்றப்பட்டு இன்றுவரை அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பாலசுதீனியர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்ற முயற்சியின் ஒரு வடிவமாகவே அக்டோபர்-7 அன்று ஏவுகணைத் தாக்குதலை ஹமாசு அமைப்பு நடத்தியது. தொடர்ந்து இசுரேலியர் சிலரைப் பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றது. அதைத் தொடர்ந்து, இசுரேல் பாலசுதீனியர்கள் மீது முழுமையான போரை அறிவித்து நடத்தி வருகிறது. ஏராளமான பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டுவிட்டனர். இசுரேல் போராளிகளை அழிப்பதை இலக்காகக் கொள்ளவில்லை. பொதுமக்களை அழிப்பதை இலக்காகக் கொண்டிருக்கிறது. பல நகரங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டன. வான்வழித் தாக்குதலும், தரைவழித் தாக்குதலும் நடத்தப்படுகிறது. வரைமுறை இல்லாத அளவிற்கு அஞ்சத்தகுந்த (அபாயகர) ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெள்ளை பாசுபரசு கொட்டிக் குடியிருப்புகள் எரிக்கப்படுகின்றன. கொத்துக் கொத்தாக குழந்தைகளும் பெண்களும் சாகும் நிலையில் காயம்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்யும் வாய்ப்பு குறைந்து போய்விட்டது. மக்கள் அடர்த்தியாக வாழும் காசா பகுதிக்கான உணவு, தண்ணீர், மின்சாரம் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன. காசா என்பது இசுரேல், எகிப்து, மத்திய தரைக் கடல் இவற்றால் சூழப்பட்டு இடையே 41 அயிர மாத்திரி(கிலோ மீட்டர்) நீளமும் 10 அயிர மாத்திரி(கிலோ மீட்டர்) அகலமும் கொண்ட 23 இலட்சம் பேருக்குத் தாயகமாக விளங்குகிற பகுதி. உலகில் உள்ள குறைந்த நிலப்பரப்பில் அதிக மக்கள் வாழும் பகுதிகளில் இதுவும் ஒன்று. 23, லட்சம் பேரில் 10 லட்சம் பேருக்கு உணவு இல்லை. அக்டோபர் 19ஆம் நாள் காசாவில் உள்ள அகில் மருத்துவமனையில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டுவிட்டனர். பாலசுதீனம் என்ற பகுதி உலக வரைபடத்திலேயே இல்லாமல் அழிக்கப்படவும், பாலசுதீனியர் என்ற தேசிய இனமக்களே இல்லாமல் முற்றிலுமாகக் கொன்றொழிக்கப்படவுமான சூழ்நிலை எழுந்துள்ளது.

வரைமுறைக்கு அப்பாற்பட்ட போரை இசுரேல் நடத்திக் கொண்டிருக்கிறது. வழக்கம் போலவே அமெரிக்கா இசுரேலுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்துள்ளது. தொடக்கம் முதல் பாலசுதீனிய விடுதலையை ஆதரித்து வந்திருக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு நேர்மாறாக, ஆர்எஸ்எஸ் இன் இந்துத்துவ பாசிச ஆட்சியாளராக விளங்கும் மோடி இசுரேலுக்கு இந்தியாவின் ஆதரவைத் தெரிவித்து உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். இதுவரை இருந்த எந்த தலைமை அமைச்சரும் (பிரதமரும்) இசுரேலுக்குச் சென்றதில்லை. இசுரேலுக்கு சென்ற முதல் தலைமை அமைச்சர் (பிரதமர்) நரேந்திர மோடிதான்.

கடந்த அக்டோபர்-7 அன்று, கமாசு அமைப்பு ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதால்தான் இசுரேல் போர் தொடுத்தது என்று எவரும் கருத முடியாது. ஏனெனில், 2000-ஆம் ஆண்டிலிருந்தே, இப்பிரச்சினை தீவிரமாக நடந்து வந்தது. 2000 - 2005 ஆண்டுக் காலத்தில் 4,973 இசுலாமியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஏராளமான குடியிருப்புகள் அழிக்கப்பட்டன. 2002-இல் மேற்குக் கரையில் இராணுவத் தேடல் என்ற பெயரில் இசுரேலிய இராணுவம் புகுந்து அழித்தொழிப்பை மேற்கொண்டது. தொடர்ந்து வான்வழித் தாக்குதலை நடத்தியது. சவூதி அரேபியா ஏற்பாட்டில் அமைதி குறித்து பேசத் தயார் என்று யாசர் அராபத் அறிவித்தாலும் பேசுவதற்கு இசுரேல் மறுத்துவிட்டது. இதன் பிறகு தான் கமாசு களத்தில் இறங்கியது.

எபிரேய பைபிள் பேசுகிறபடி, யூதர்களும் பாலசுதீனியர்களும் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள். இன்றைய இசுரேலிய பகுதியாகிய அன்றைய கானானில் வாழ்ந்தார்கள். கி.மு 1000-இல் யூதர் டேவிட் ஆட்சி நடந்தது என்றும், கி.மு 957-இல் அரசர் சாலமன் காலத்தில் யூதர்களுக்கான கோயில் கட்டப்பட்டது, அது கி.மு 722-இல் இசுரேல் அசிரியர்களால் அழிக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்படுகிறது . கி.பி.70இல் ரோமானியர்கள் யூதர்களின் இரண்டாவது கட்டப்பட்ட கோயிலை அழித்தனர். பாரசீகர்கள், ரோமானியர்கள், கிரேக்கர்கள், அராபியர்கள், பாத்திமியர், செல்ஷுக் துருக்கியர், எகிப்தியர், ஆட்டோ மான் துருக்கியர் எனப் பலர் இப்பகுதியை ஆண்டிருக்கிறார்கள்.

யூதர்கள் தங்கள் நிலப்பரப்பிலிருந்து வெளியேறி பிற நாடுகளிலேயே பெரும்பாலும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். கி.பி 12ஆம் நூற்றாண்டுகளில் ரோமானியப் படையெடுப்பு நிகழ்ந்தது. ஒவ்வொரு காலக் கட்டத்திலும் யூதர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறி வெளிநாடுகளிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர். கி.பி 312-ல் ரோமானியப் பேரரசர் கான்ஸ்டன்ட்டைன் கிறித்தவ மதத்தை தழுவியதால் ஐரோப்பாவில் யூதர்கள் நெருக்கடிக்கு உள்ளாயினர்.

புனித நகரமான செருசலேத்தை துருக்கியர்களிடமிருந்து கைப்பற்றுவதற்காக நடைபெற்ற சிலுவைப் போர்கள் கி.பி.1096 முதல் 1291 வரை நடைபெற்றன. இப்பகுதியைக் காப்பதில் இசுலாமியர் முழுமையாக ஈடுபட்டனர். போர்க்காலங்களில் பாலசுதீனிய இசுலாமியர்கள் அப்பகுதியிலேயே வாழ்ந்து வந்தனர். கிறித்தவ சிலுவைப்போர் படைப்பிரிவுகளை அவர்களே எதிர்கொண்டனர். 1512-ல் துருக்கி சுல்தான் அனுமதித்ததன் பிறகு யூதர்கள் பாலசுதீனியப் பகுதிக்கு வந்தனர்.

இசுரேலியர்கள் முன்பு ஒரு காலத்தில் இங்கே வாழ்ந்ததாகக் கூறிக் கொண்டாலும், வெளியிலிருந்து வந்த படையெடுப்புகளையும் தாக்குதல்களையும் தடுத்து நிறுத்தி நிலப்பரப்பைப் பாதுகாக்க பங்களிக்கவில்லை. படையெடுப்பாளர்களால் விரட்டப்பட்டு பல்வேறு நாடுகளில் அகதிகளாகக் குடியேறி, செல்வமீட்டுவதில் மட்டுமே அக்கறை கொண்டவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் பாலசுதீனியர்கள் தொடக்கம் முதல் இன்று வரை, வாழ்வோ சாவோ அதுவே தங்கள் தாயகம் என்ற நினைவோடு, பல்வேறு படையெடுப்புகளுக்கும் முகம் கொடுத்து, இன்னல்களை அனுபவித்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இசுரேலியர்கள் இப்போது தங்களுக்கான ஒரு தாயகத்தையும், அரசையும் நிறுவிக்கொண்டாலும் அவர்கள் குடியேறிகளே ஆவர். பாலசுதீனியர்கள் தங்களுக்கான ஏற்பளிக்கப்பட்ட ஓர் அரசு இல்லாமல் இருந்தாலும் அவர்களே மண்ணின் மைந்தர்கள் ஆவர். இசுரேலியர்களுக்கும், பாலசுதீனியர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு குடியேறிகளுக்கும், மண்ணின் மைந்தர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஆகும். பாலசுதீனர்களுக்கு இல்லாத செல்வாக்கும், உலக அளவில் அரசதிகார பலமும், யூதர்களுக்கு இருக்கிறது. அதைப் பயன்படுத்தியே அவர்கள் தங்களுக்கான ஒரு தாயகத்தை நிறுவிக் கொண்டார்கள்.

1517 முதல் 1917 வரை துருக்கியப் பேரரசு நிலவியது. பாலசுதீனம் அதன் ஒரு பகுதியாக விளங்கியது. 19-ஆம் நூற்றாண்டில், இன்றைய பாலசுதீனப் பகுதியில் 87% இசுலாமியர்களும், 10% கிறித்தவர்களும், 3% யூதர்களும் வாழ்ந்து வந்தார்கள். அதன் பிறகு வந்தவர்கள் அத்தனை பேரும் குடியேறிகளே.

யூதர்களினுடைய தாயகம் பற்றிய சிந்தனையைத் தொடங்கி வைத்தவர் தியோடார் ஹெர்செல் என்ற 19-ஆம் நூற்றாண்டு ஆஸ்ட்ரோ ஹங்கேரிய யூத பத்திரிக்கையாளர். இதன் அடிப்படையில் யூத தாயகம் பற்றிய கோரிக்கை பேசப்பட்டது. முதல் உலகப்போரில் பெருமளவு பணம் தேவைப்பட்ட நிலையில், உலக செல்வந்தர்களான யூதர்களின் உதவியை பிரிட்டன் நாடியது. அதற்கு கைம்மாறாக யூதர்களுக்கான தேசியத் தாயகம் ஒன்றை நிறுவ உதவுவதாகவும் பிரிட்டன் வாக்களித்தது. போர் முடிந்த பிறகு ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பாலசுதீனத்தில் யூத தாயகத்தை நிறுவுவதற்குப் பிரிட்டிசு வெளியுறவு அமைச்சராகிய பால்ஃஃப்போர் ஓர் பிரகடனத்தை வெளியிட்டார். ஆங்கிலேயர்கள் கட்டுப்பாட்டில் இருந்த பாலசுதீனத்தில் யூத தாயகத்தை இப்ப பிரகடனமே உருவாக்கியது. இப்பிரகடனத்திற்குப் பாலசுதீனியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

1881-1924க்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் 20 லட்சம் யூதர்கள் குடியேறினார்கள். அனைத்துத் துறையிலும் சிறந்தவர்களாகவும் பெரும் செல்வந்தர்களாகவும் மாறினார்கள். 1933-இல் ஹிட்லரின் இனவெறியின் காரணமாக நெருக்கடிக்கு உள்ளான யூதர்கள் பல நாடுகளுக்குத் தப்பிச் சென்று வாழ்ந்தார்கள்; பாலசுதீனத்திற்கும் வந்து சேர்ந்தார்கள்.

1920 மற்றும் 1930-களில் யூத மக்கள் தொகை பாலஸ்தீனப் பகுதியில் அதிகரித்தது.

1936-இல் பாலசுதீனியர் பிரிட்டிசாருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இதைப் பிரிட்டன் யூதப் போராளிகள் உதவியோடு ஒடுக்கியது. ஆங்கிலேயர்கள் வெளியிட்ட வெள்ளை அறிக்கைபடி, யூத-அரபு கூட்ட அரசு 10 ஆண்டுகளுக்குள் யூத-அரபுக் கூட்டு அரசை 10 ஆண்டுகளுக்குள் நிறுவப் போவதாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து சட்ட விரோதமாக யூதர்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டனர். இங்கிலாந்து இப் பிரச்சனையை ஐக்கிய நாடுகள் அவையிடம் ஒப்படைத்தது. 1947-இல் பாலசுதீனத்தைப் பிரித்து பாலசுதீனம் என்றும் யூத நாடு என்றும் பிரிப்பதற்கான ஐ.நா.வின் முன்முடிவை அராபியர்கள் நிராகரித்தார்கள். இங்கிலாந்து பாலசுதீனத்திலிருந்து வெளியேறுவதற்கு முதல் நாள் 1948 மே 14-அன்று, டேவிட் பென் குரியன் இசுரேலிய பிரதமராக அறிவிக்கப்பட்டார். இசுரேலிய சுதந்திர நாடு அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து 5 அரபு நாடுகளுக்கும் இசுரேலுக்கும் போர் மூண்டது.

ஈராக், சிரியா, லெபனான், ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகள் இசுரேலை எதிர்த்து பாலசுதீனியப் பகுதிகளில் படை நடத்தினர். 1949-இல் போர் நிறுத்தம் ஏற்பட்டது. சுதந்திர பாலசுதீனம் உருவாக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, அவரவர்கள் கைப்பற்றிய பகுதிகளை அவரவர்களே வைத்துக்கொண்டனர். மேற்கு கரைப் பகுதியை ஜோர்டானும், காசா பகுதியை எகிப்தும், பாலசுதீனத்தில் அதிகப் பகுதிகளை இசுரேலும், கிழக்கு ஜெருசலேம் பகுதியை ஜோர்டானும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. கிழக்கு ஜெருசலேம் ஜோர்டானின் கட்டுப்பாட்டிலும், மேற்கு ஜெருசலேம் இசுரேலின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. இதைத் தொடர்ந்து 7 இலட்சம் பாலசுதீனியர்கள் அகதிகளாக வெளியேறினார்கள். இந்தப் போருக்கு "நக்பா" (பேரழிவு) என்று பெயர். இவ்வாறு 1948-இல் அகதிகளாக, நாடற்றவர்களாக பாலசுதீனியர் மாறினர்.

1948-இல் ஐ.நா அவை ஒரு பிரிவினைத் திட்டத்தை அறிவித்தது. அதன்படி இசுரேலியர்களுக்கும் பாலசுதீனியர்களுக்கும் பாலசுதீனப் பகுதியைப் பிளந்து இரு நாடுகளை அமைத்து விடுவது என்றும், ஜெருசலேம் ஒரு சர்வதேச நகரமாக அறிவிக்கப்படுவது என்றும் ஐ.நா திட்டம் வகுத்தது.

அகதிகளாக வெளியேறியுள்ள பாலசுதீனியர்கள் பல்வேறு நாடுகளில் குடியமர்ந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்தின் நயவஞ்சகமும், இசுரேலியர்களின் செல்வவளமும் இசுரேல் என்ற நாட்டைப் படைத்தது. 1967 இல் "ஆறு நாள் போர்" என்பது நடைபெற்றது. இப்போரில் இசுரேல், காசா, மேற்கு கரை, கோலன் ஹைட்ஸ், சினாப் பகுதிகளை இஸ்ரேல் பிடித்தது. இவ்வாறு பாலசுதீனத்தின் பெரும்பகுதி இசுரேலின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

1973-இல் சிரியாவும் எகிப்தும் இணைந்து இசுரேல் மீது வான்வழித் தாக்குதல் நடத்தின. ஆனால் ஐக்கிய நாடுகள் அந்தப் போரைத் தடுத்து நிறுத்தியது.

1964-இல் பாலசுதீன விடுதலை இயக்கம் உருவானது. பாலசு தீனியர்களுக்கான அந்நிலப் பரப்பை விடுவிப்பதை இலக்காகக் கொண்ட பாலசுதீன விடுதலை இயக்கத்தால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. 1987-இல் பாலசுதீனியர் மத்தியில் "முதல் எழுச்சி" ஏற்பட்டது. இதற்கு முதல் பாலசுதீனிய இன்டிஃபாடா (நடுக்கம்) என்று பெயர். தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்தன. 1993-இல் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. 1995-இல் இசுலாமிய பிரதமர் இட்சாக் ராபின் மற்றும் பாலசுதீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தனர். அதன்படி, பாலசுதீனிய ஆணையம் உருவாக்கப்பட்டு சில பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது ஏற்கப்பட்டது. ஆனால் யாசர் அராபத் இந்த ஒப்பந்தத்திற்காகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

2000-இல் இரண்டாவது பாலசுதீனிய இன்டிஃபாடா ஏற்பட்டது. இந்த எழுச்சிக்குக் காரணம் இசுரேலிய அரசியல்வாதியாகிய ஏரியல் ஜரோன் ஜெருசலேமில் அல் அக்சா மசூதிக்குப் போனதால் உருவான பிரச்சனையால் ஏற்பட்டது.

இரண்டாவது இன்டிஃபாடா என்ற எழுச்சி ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்தது. 2000 - 2005 இக்காலகட்டத்தில் பாலசுதீனியர்களின் குடி யிருப்புகள் இசுரேலால் அழிக்கப்பட்டன. இசுரேலின் தலைநகர் குறித்து,1980-இல் இஸ்ரேலிய நெசட் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி ஒன்றுபட்ட ஜெருசலேம் இசுரேலின் தலைநகரம் என அறிவிக்கப்பட்டது. 2017-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் டொனால்டு டிரம்ப் ஜெருசலேம் முழுவதும் இசுரேலின் தலைநகரம் என்று ஏற்றுக்கொண்டார்.

1987-இல் அமாசு அமைப்பு உருவானது.

2006-இல் அமாசு தேர்தலில் வெற்றி பெற்று காசாவை நிர்வகிக்கத் தொடங்கியது. 2005-இல் காசாவில் இருந்து இசுரேல் வெளியேறியது. 2006-இல் நிகழ்ந்த சண்டையில் பி.எல்.ஓ அமைப்பின் அரசியல் குழுவைத் தோற்கடித்தது. 2008, 2012, 2014 ஆண்டுகளில் இசுரேலுடன் அமாசு போர் புரிந்தது. 2021ல் கிழக்கு ஜெருசலேமில் இருந்து பாலசுதீனர்களை இசுரேல் வெளியேற்றியதால் வன்முறை வெடித்தது. அல் அக்கா என்ற மசூதி வளாகத்தில் இசுரேலிய போலீஸ் தாக்கி படுகொலைகளை நிகழ்த்தியது. 2022-ல் கிழக்கு ஜெருசலேத்தில் இசுரேல் தாக்குதல் நடத்தியபோது வல்லரசுகள் மௌனம் சாதித்தன. ஆகவே தொடர்ந்து இசுரேல் தாக்குதல்களை நடத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களுடைய நோக்கம் ஒட்டுமொத்தமாகப் பாலசுதீனியர்களை அகதிகளாக்கித் துரத்தி அடித்துவிட்டு, முழு பாலசுதீனப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொள்வது, முழுமையான ஜெருசலத்தை இசுரேலின் தலைநகராக ஆக்கிக் கொள்வது என்பதுதான். நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு அமாசு தீவிரவாதம்தான் காரணம் என்று பேசுவது பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதவர்களின் பார்வை.

இன்று, காசாவின் எல்லைகள் இசுரேலின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மேற்கு கரை இசுரேலின் ஆக்கிரமிப்பில் இருக்கிறது. கிழக்கு ஜெருசலேமில் இசுலாமியர் மீது இசுரேல் தாக்குதல் நடத்தி வெளியேற்றிவிட்டது.

பாலசுதீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப விரும்புகிறார்கள். அவர்களை அழிப்பதா, அனுமதிப்பதா? என்ற கேள்வியும், அனுமதித்தால் யூத நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற சிந்தனையும், ஜெருசலேம் முழுவதையும் தனது தலைநகராகக் கொள்ள வேண்டும் என்ற இசுரேலின் ஆசையும் தாம் இன்று நடக்கும் போருக்குக் காரணங்கள்.

ஐ.நா. அவையில் 135 உறுப்பினர்கள் பாலசுதீனத்தை ஆதரிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் அவையில் பார்வையாளர் தகுதி வழங்கப்பட்டுள்ள ஒரே நாடு பாலசுதீனம். 1988-இல் பாலசுதீன் அரசை அங்கீகரித்த முதல் நாடுகளில் ஒன்று இந்தியா. ஆனால் இன்று இனவாத பாசிசத்தில் நம்பிக்கை கொண்ட மோடி அரசு இசுரேலை இந்தியா ஆதரிப்பதாக அறிவித்திருக்கிறார். இசுரேலை ஆதரிப்பது இந்தியாவின் பார்வை அல்ல; அது ஆர்.எஸ்.எஸ்.-இன் கொள்கை.

ஒட்டுமொத்தமாக அழிக்கப்படும் முன், உலகத் தலைவர்கள் இச் சிக்கலைத் தீர்க்க முன் வர வேண்டும். பாலசுதீனியர்கள் யூதர்களைக் கடந்த காலத்தில் அரவணைத்தார்கள், குடியேற அனுமதித்தார்கள்; வேலைகளைத் தந்தார்கள்; அவர்கள் விரும்பிய போது விலைக்கு நிலங்களையும் கொடுத்தார்கள். இசுரேலிய யூதர்களினுடைய சூழ்ச்சியை அறியாதவர்களாக வாழ்ந்தார்கள்.

பாலசுதீனியர்கள் பாலசுதீனப்பகுதியில், வரலாறு முழுவதும் எத்தகைய அழிவு வந்தாலும் முகங்கொடுத்து, அதை எதிர்கொண்டு, வாழ்வோ சாவோ அதுவே தங்கள் மண் என்ற நினைவோடு இன்றுவரை வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களை நாடற்றவர்களாக்கிச் சொந்த மண்ணை விட்டுத் துரத்தி அடித்திருக்கக்கூடிய இசுரேலின் ஆக்கிரமிப்புச் செயல்பாடுகள் கண்டனத்துக்குரியவை. பாலசுதீனிய மக்கள் அனுபவிக்கும் துயரங்களைச் சொற்களால் விவரிக்க முடியாது.

சிக்கலுக்கு ஒரு தீர்வு வேண்டும். ஐக்கிய நாடுகள் அவை உடனடியாகத் தலையிட்டுப் பாலசுதீனத்தில் நடத்தப்படும் இசுரேலிய ஆக்கிரமிப்புப் போரைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவசியமானால், ஐக்கிய நாடுகள் அமைப்பு தன் அமைதிப்படையை பாலசுதீனத்தில் நிறுத்தி அமைதியைப் பராமரிக்க வேண்டும். உடனடித் தேவை அமைதி.

பாலசுதீன மக்களின் இறையாண்மையை ஐக்கிய நாடுகள் அமைப்பும், உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும். பாலசுதீனத் தேசிய இனத்தின் இறையாண்மையுள்ள தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதில் குளறுபடி செய்ய நினைக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு உலகத் தலைவர்கள் முறையாக அறிவுறுத்த வேண்டும். சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு இதுவே ஆகும்.




## உயர்நீதி மன்றத்தில் தமிழ்? - கருத்தரங்கம்

கடந்த அக்டோபர் 13-ஆம் நாள் உயர்நீதி மன்றத்தில் தமிழ் மேம்பாட்டுக் குழுவின் முன்னெடுப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர் பாவேந்தன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. வழக்குரைஞர் இ. அங்கயற்கண்ணி வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் பகத்சிங் தொடக்கவுரையாற்றினார். மூத்த வழக்கறிஞர்கள் பி எசு அமல்ராசு, எசு. பிரபாகரன், ஜி.மோகனகிருஷ்ணன், ஆர். சி. பால்கனகராசு. எம் வேல்முருகன், கு. பாலு, மு. முத்துவேலு, ஆகியோருடன் அரசியல் கட்சித் தலைவர்கள் ஏ. மா. சுதர்சன நாச்சியப்பன், என் ஆர் இளங்கோ, முனைவர் கோ விசயராகவன், அ. முகமதுசியாவுதின் ஆகியோர் கலந்துகொண்டுரையாற்றினர், பெருந்திரளாய் வழக்கறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்..

# கல்விசார் இயக்கங்களில் ஒரு திருப்புமுனை

● **கண. குறிஞ்சி,** மக்கள் கல்விக் கூட்டியக்கம் ●

கல்விசார் இயக்கங்கள் பற்றி எண்ணிப் பார்க்கும் பொழுது, அமெரிக்கக் கவிஞர் இராபர்ட் பிராஸ்ட்டு அவர்களின் ஒரு பாடல்(கவிதை) தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகிறது.

"தேர்ந்தெடுக்காத பாதை" (The road not taken) எனும் அப் பாடலில் பாவலர் தனது பட்டறிவை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். மரங்கள் நிறைந்த காட்டுப்பாதையில் பாவலர்(கவிஞர்) சென்று கொண்டிருக்கும் பொழுது, அவர் முன் இரண்டு பாதைகள் பிரிகின்றன. இரண்டு பாதைகளையும் அவர் நன்கு ஆராய்ந்து பார்க்கிறார். ஒரு பாதையில் பலரும் நடந்து சென்ற அறிகுறிகள் தென்படுகின்றன. மற்றோர் பாதையில் செடிகளும் புல்லும் நிறைந்து கிடக்கிறது. யாரும் அதில் சென்றதற்கான சுவடே தெரியவில்லை. நீண்ட சிந்தனைக்குப் பின், யாரும் பயணம் செய்யாத பாதையைத் தேர்ந்தெடுத்து, அதில் அவர் தன் பயணத்தைத் தொடர்கிறார். ஆனால், தனது பயணத்தில் அவர் எதிர்பாராத பெரும் வெற்றி பெறுகிறார் என அப்பாடல் செல்கிறது.

அரிச்சுவடி பயிலும் பள்ளியிலிருந்து, ஆய்வுகள் மேற்கொள்ளும் பல்கலைக் கழகங்கள் வரை பணியாற்றும் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்குப் பல நூற்றுக் கணக்கான சங்கங்கள் உள்ளன. அரசின் புள்ளிவிவரப்படியே ஏறக்குறைய 300 ஆசிரியர் சங்கங்கள் தமிழகத்தில் உள்ளன. தொடக்கப் பள்ளி என்றாலும், உயர்நிலைப்பள்ளி என்றாலும், மேனிலைப்பள்ளி என்றாலும், கல்லூரி என்றாலும், பல்கலைக் கழகம் என்றாலும், ஒவ்வொரு படிநிலையிலும் தனித்தனியே பல்வேறு சங்கங்கள் உள்ளன. தொடக்கப் பள்ளி என்றால், அதற்காகப் பல சங்கங்கள் உள்ளன. அதைப்போலவே மற்ற பிரிவுகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்டுப் பற்பல சங்கங்கள் உள்ளன. தத்தம் பிரிவு சார்ந்த கோரிக்கைகளுக்காக ஒவ்வொரு அமைப்பும் ஒரு தொழிற்சங்கம் போலத் தொடர்ந்து போராடி வருகின்றன. அதைக் குறைத்து மதிப்பிட முடியாது. அம் முன்னெடுப்பு வரவேற்கத் தக்கதும்கூட!

ஆனால் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை ஒன்றாக இணைந்து ஒரு குடைக்கீழ் செயல்படும் முயற்சி, தமிழ்நாட்டில் இதுநாள் வரை மேற்கொள்ளப்படவில்லை. யாரும் பயணம் செய்யாத பாதையாக அது விளங்குகிறது. இராபர்ட் பிராஸ்டு போல, யாரும் பயணம் செய்யாத அப்பாதையில் செல்ல ஒரு புதிய முயற்சி அண்மையில் கருக்கொள்ளத் தொடங்கியது.

அத்தருணத்தில்தான் தமிழ்நாட்டிற்கு எனத் தனித்துவமான ஒரு கல்விக் கொள்கையை உருவாக்குவதற்குத் தமிழ்நாட்டரசு அமைத்திருந்த கல்விக்குழுவிலிருந்து பேராசிரியர் சவகர் நேசன் அவர்கள் விலகியிருந்தார். எனவே அவரது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் முகத்தான் மதுரையிலும், சென்னையிலும் கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. சென்னையில் நடந்த கருத்தரங்கின் இறுதியில், அதில் பங்கேற்ற பல அமைப்புகளின் பரிந்துரையின் அடிப்படையில் **"மக்கள் கல்விக் கூட்டியக்கம்"** எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஐந்து கல்வியாளர்களை ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு, செயற்குழு – பொதுக்குழு என மூன்று அடுக்காக இது கட்டமைக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைத்த / ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பாக மக்கள் கல்விக் கூட்டியக்கம் தோன்றியது வரலாற்றின் தவிர்க்க முடியாத போக்காகும். வெற்றிடத்தைக் காற்று நிரப்பும் என்பதைப்போல இதுவரை காலியாக இருந்த அந்த இடத்தை இக்கூட்டியக்கம் நிரப்பியது.

அனைத்து ஆசிரியர்களின் கோரிக்கைகள், கல்விசார் சிக்கல்கள் ஆகியவை குறித்துக் குறுக்கீடு செய்வதும், ஆதரவளிப்பதும், அரசிடம் எடுத்துச் செல்வதும் கூட்டியக்கத்தின் திசைவழியாகத் தீர்மானிக்கப் பட்டது. இக்கூட்டியக்கம் ஒரு தொழிற்சங்கம் அல்ல! மாறாக, ஆசிரியர் சங்கங்களின் ஒருமித்த பேரமைப்பு என்பதாக இதன் எல்லை தீர்மானிக்கப்பட்டது.

தேசியக் கல்விக் கொள்கை 2020–ன் மிகப்பெரும் ஆபத்து, கல்வி வணிகமயமாதல், காவிமயமாதல், மையமயமாதல், கல்வி நிறுவனங்களில் நிலவும் சாதியப் பாகுபாடுகள், மாநிலங்களின் கல்வி உரிமை, பாடத்திட்டங்கள் சீரமைப்பு, தமிழ்வழிக் கல்வி, மாணவர்களின் உரிமை போன்ற கல்விசார் அனைத்துச் சிக்கல்களிலும் குறுக்கீடு செய்து கல்வியில் சனநாயகத்தை நிலைநாட்டுவதும் கூட்டமைப்பின் செயல்திட்டமாக விரிவடைந்துள்ளது.

அதன் அடிப்படையில், இன்றைக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின்–எரியும் பிரச்சனையாக இருக்கும் □ இரண்டு கோரிக்கைகளை முதலில் முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு, 2023 அக்டோபர் ஒன்றாம் நாள் தமிழகம் தழுவிய ஆசிரியர்களின் கோரிக்கை மாநாடு மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆசிரியர்களின் பணிநிரந்தரம் / பணிப் பாதுகாப்பு மற்றும் சம வேலைக்குச் சம ஊதியம் எனும் இரண்டு கோரிக்கைகள் மாநாட்டில் முன்னெடுக்கப் பட்டன. தமிழகம் முழுவதும் அரசுக் கல்லூரிகளில் கௌரவ (?) விரிவுரையாளர்கள் என்ற பெயரில் சுமார் 7,000 பேர் பல்லாண்டுகள் அத்துக் கூலிக்குப் பணியாற்றி வருகின்றனர். அதே போல் அரசுப் பள்ளிகளில் பகுதிநேர (?)ஆசிரியர்கள் என்ற பெயரில் எண்ணற்றோர் கொத்தடிமைகள் போலப் பணியாற்றி வருகின்றனர். இன்றைய நிலையில் ஒரு கட்டடப் பணியாளர் ஒரு நாளைக்குப் பெறும் கூலியைவிடக் குறைவான தொகையைப் பெற்று, மிக உயர்ந்த கல்வித்தகுதியுள்ள கௌரவ விரிவுரையாளர்களும், பகுதி நேர ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர் என்பது பேரவலம்.

எனவே கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் ஆகியோரது தகுதிக்கேற்ற அரசு ஊதியம் வழங்க வேண்டும். அவர்களது பணியை நிரந்தரமாக்க வேண்டும் எனும் முகாமையான கோரிக்கைகளை ஆதரித்துக் கூட்டமைப்புச் சார்பாகச் சமூக ஊடகங்களில் பரவலான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. பல நூற்றுக் கணக்கான ஆதரவுக் கையொப்பங்களைப் பெற்று, இணையவழிக் கோரிக்கை மனுவும் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இவ்விரு கோரிக்கைகளையும் வலியுறுத்திய மாநிலக் கோரிக்கை மாநாட்டில் பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த பல்வேறு ஆசிரியர் அமைப்புகளும், மாணவர் அமைப்புகளும் பெருவாரியாகப் பங்கேற்று மாநாட்டின் கோரிக்கைகளுக்கு வலுச் சேர்த்தனர்.

அரசுக் கல்லூரிகள் / அரசுப் பள்ளிகள் என்ற அளவில் நின்றுவிடாது, தனியார்க் கல்லூரிகள் மற்றும் தனியார்ப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் பல்வேறு பிரிவு ஆசிரியர்களுக்காகவும் இம்மாநாடு குரல் எழுப்பியது கருதத் தக்கதாகும். தவிரவும், கல்விசார்ந்த இத்தகைய சிக்கல்களைத் தெளிவுபடுத்தத் தக்க வகையில், "தமிழகக் கல்விக் கொள்கைக்கான திசைவழி" மற்றும் "தமிழகத்தில் ஆசிரியர்களின் அவல நிலை, - விடியல் எப்போது?" எனும் இரண்டு தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டன. மேலும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்களைத் தொகுத்துக் குறுவெளியீடு ஒன்றும் வெளியிடப்பட்டது.

இம்மாநாடு நடைபெற்ற காலகட்டத்தை ஒட்டிப் பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கோரிக்கைகளுக்காகச் சென்னையில் நடைபெற்ற பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திற்கு மக்கள் கல்விக் கூட்டமைப்புப் பல்வேறு வகைகளில் பேராதரவினை வழங்கி அவர்களுக்கு உறுதுணையாக இருந்ததும் குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர்கள் / மாணவர்கள் / அரசு ஆகிய மூன்று கூறுகளும் இணைந்ததாகக் கல்விப் புலம் அமைந்துள்ளது. எனவே மாணவர்கள் பங்கேற்காத எந்தக் கல்வி முயற்சியும் முழுமை பெற்றதாக இருக்க முடியாது. எனவே ஆசிரியர்களது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்தது போலவே, மாணவர் இயக்கங்களையும் ஒருங்கிணைத்து, அவர்களது உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கக் கூட்டமைப்புத் திட்டமிட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாகத்தான் புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர் நாசர் அவர்களுக்கு ஆதரவாகக் கூட்டமைப்புத் துணை நிற்கிறது. பிப்ரவரி 19, 2023 அன்று அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் அமைப்பைச் சார்ந்த நபர்கள், முற்போக்கு எண்ணங் கொண்ட சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கி உள்ளனர். இதில் மூலக்கூறு மருத்துவத்திற்கான சிறப்பு மையத்தின் (SCMM ) முனைவர் பட்ட மாணவர் நாசர் முகமது மொகைதீன் அவர்கள் கடுமையாகக் காயம் அடைந்தார். மேலும் தமிழ் மாணவன் என்பதாலும், முசுலீமாக இருப்பதாலும் நாசர் குறி வைத்துத் தாக்கப்படுகிறார். மேலும் அவரது ஆய்வுப் படிப்பை முடிப்பதற்குப் பல்வேறு தடைகள் போடப்பட்டு, தனது ஆய்வைப் பாதியிலேயே கைவிட்டு, சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்திலிருந்தே அவரை விரட்டியடிக்கத் தீவிரமான சதிகள் நடக்கின்றன. மேலும் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள பெரியார், மார்க்ஸ், ஷோதிபாய் பூலே போன்ற தலைவர்களின் படங்களையும் ஆர் எஸ் எஸ் அமைப்பைச் சார்ந்த ஏபிவிபி மாணவர் அமைப்பினர் உடைத்து நாசமாக்கி உள்ளனர். இத்தகைய சங்பரிவார் ஆதரவாளர்களின் வன்முறைத் தாக்குதலைக் கண்டித்தும், ஆய்வு மாணவர் நாசருக்கு ஆதரவாகவும் இணையவெளிக் கையெழுத்து இயக்கத்தை மக்கள் கல்விக் கூட்டியக்கம் மாநில அளவில் முன்னெடுத்து வருகிறது.

தவிரவும், கல்வி அதிகாரத்தை முற்றிலும் ஒன்றிய அரசின் கைப்பிடிக்குள் சிறைவைக்க அனைத்து ஏற்பாடுகளையும் சங்கிகள் வேக வேகமாகச் செய்து வருகின்றனர். ஏற்கெனவே மாநிலப் பட்டியலிலிருந்த கல்வி அதிகாரம் கமுக்கமாக ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு விட்டது. இத்தகைய சனநாயகப் பகை நடவடிக்கையை மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. தவிரவும், தமிழ்நாட்டிற்கான கல்வி இறையாண்மையை நிறுவ வேண்டிய அவசரக் கடப்பாடு, எதிர்காலத்தின் மீது கரிசனம் கொண்ட அனைவருக்கும் உள்ளது.

மேலும் கல்வியில் சமத்துவத்தையும், சமூகநீதியையும் நிலைநாட்ட வேண்டிய இலட்சியத்தைக் கருத்தில் கொண்டே ஒவ்வொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. இவ்விரு விழுமியங்களுக்கும் எதிராகச் செயல்படும் சக்திகளை முறியடிக்க வேண்டிய கடமை இப்பொழுது முன்னுரிமை பெற்றுள்ளது.

கல்வி என்பதன் பின்னுள்ள அரசியலை அடையாளம் கண்டுகொள்வதன் மூலமே அதற்கு எதிரான தடைகளை வெற்றி காண இயலும். அவ்வகையில் கல்வியின் திசைவழியைத் தீர்மானிக்கும் சக்திகள் குறித்த பின்னணி மிகவும் முக்கியமானது.

1990–ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் திணிக்கப்பட்ட தாராளமயம், தனியார்மயம், உலகமயம் ஆகிய எதிர்மறைப் போக்குகள் குறித்த புரிதல் அவ்வகையில் மிகவும் தேவை. இந்த மூவகைப் போக்குகள் மற்ற துறைகளைப் போலவே, கல்வித் துறையையும் பெரும் நாசத்திற்கு உள்ளாக்கிவிட்டது. அந்தக் கால கட்டத்தில்தான் கல்வி என்பது சேவை அல்ல. அது ஒரு சரக்கு (Education is not a service but a commodity) எனவும், அந்தச் சரக்கை நல்ல விலைக்கு விற்க முடியும் எனவும், அதன் மூலம் குறுகிய காலத்தில் பெரும் இலாபத்தை ஈட்ட முடியும் எனவும் உலக வங்கி முதலாளிகளுக்கு வழிகாட்டுதல் தந்தது. "கல்வியைத் தொழிலாகச் செய்து இலாபம் ஈட்டுவது தவறல்ல" என நீதிமன்றங்களும் அப்போக்கினை ஊக்குவித்தன. மேலும் காட் (GATT) ஒப்பந்தத்தை ஆதரித்து இந்தியா ஏற்கெனவே கையொப்பமிட்டி ருந்த காரணத்தால், நலத்திட்டங்களுக்கான அரசின் பங்களிப்புக் கணிசமாகக் குறைக் கப்பட்டது. அனைத்துத் துறைகளிலும் தனியார்மயம் எனும் சூறாவளிப் பேரழிவைத் தந்தது. கல்வித் துறையிலும் அது பாரதூரமான தாக்கத்தை உருவாக்கியது. அதிலும் குறிப்பாகக் கல்வியில் தனியார் மூலதனம் பெருமளவு குவிக்கப்பட்டது. இன்றைய நிலையில் கல்வியில் அதிக அளவு தனியார் மூலதனத்தைக் குவித்துள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியான இடத்தைப் பெற்றுள்ளது. எனவே இன்றைய கல்வி என்பதை இந்தப் பின்னணியில் புரிந்து கொண்டு, அதைச் சனநாயகப் படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு கல்வியாளர்களுக்கு உள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, கல்வி உரிமைகளுக்காகக் களமாடி வெற்றி பெறக் கூட்டுவலிமை தேவைப்படுகிறது. கல்வியில் விடிவு என்பதைக் கல்வியாளர்கள் மட்டுமே களமாடி வெற்றி கண்டுவிட முடியாது. சனநாயக ஊழியில் மக்களின் பங்கேற்பு இல்லாமல் எதுவும் நடக்காது. எனவே கல்விசார் சிக்கல்களை மக்களிடம் கொண்டு சென்று, அவர்களது ஆதரவை வென்றெடுக்க வேண்டிய தேவை உள்ளது. அத்தகைய முயற்சியை மேற்கொள்ளும் எந்தவொரு அமைப்பும் விடியலைக் கண்டடைய முடியும். அத்தகைய விடியலின் வெளிப்பாடாக மக்கள் கல்விக் கூட்டியக்கம் உருவாகி உள்ளது எனக் கருதலாம். அதன் வளர்ச்சி, கல்வித் துறையில் மறுமலர்ச்சியை உருவாக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

# எல்லாப் புகழும் அரசருக்கே!

● **பேராசிரியர் மணிகோ. பன்னீர் செல்வம்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 ●

கால்டுவெல்லின் திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கண ஒளியில் (மக்கள் புழக்கத்தில் மொழி) பழந்தமிழ் பாடல்களையும் துணையாகக் கொண்டு தமிழ்க் குமுகம் வரலாறற்ற குமுகம் எனும் கடந்த காலத்திய பரப்புரை முறியடிக்கப்பட்டது. ஐரோப்பியர் சிலர், சி.வை.தா. கனக சபை, நல்லுசாமி, மனோன்மணியம் சுந்தரனார் போன்றோர் தமிழ் இலக்கியப் பதிப்பு பணியின் வழித் தமிழரின் பொது வரலாறு எழுதியதற்கு (Histrography) உருப்படிகளை நல்கத் தொடங்கி வைத்தனர்.

1903-இல் இருந்து தனித்ததோர் துறையாகத் தமிழரின் வரலாற்றை எழுதத் தொடங்கினர்.

ஐரோப்பியர், பார்ப்பனர், வெள்ளாளர் என்று அடுத்தடுத்தக் குமுகக் குழுக்கள் தமிழ், தமிழர் வரலாற்றைச் செவ்வியல் பனுவல்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு எழுத வந்தனர். இப்படி வரலாறெழுதும் அறிஞர்களுக்கும், அவர்கள் குழு நலன் சார்ந்த சிந்தனையும் உண்டு; பொது நலனும் உண்டு.

மொழி இன நோக்கிலும் பின்னர், வர்க்க அணுகுமுறையிலும் பல்வேறு அலுவல் பணிக்கான திறனறிவு என்ற வகையிலும் தமிழர் வரலாறு விரிவாக எழுதப்பட்டு வந்தன. 1900-களிலிருந்து அதன் நடுப்பகுதி வரை தமிழரின் இலக்கிய வரலாறு ஆகப் பெரும்பான்மையாக ஆரிய, சமசுகிருதப் பண்பாட்டுக்கு எதிரான இலக்கிய வரலாற்று குவிப்பே ஆகும். 1900 நடுப்பகுதி தொடங்கி அதற்குப் பின்னரும் பலவகையாகத் தமிழர் பொது வரலாறும், இலக்கிய வரலாறும் பல்வேறு பார்வைகளோடு ஒரு சிலரால் முன்வைக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டும் (90-கள்) 21 ஆம் நூற்றாண்டின் கடந்த 20 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திராவிட, தலித்திய, பெண்ணிய, இயக்க நோக்கோடும் தமிழர் வரலாற்றை விரிவு செய்து வருகின்றனர். செம்மொழி நடுவண் தமிழாய்வு நிறுவனம், சாகித்திய அகாடமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், பல்கலைக்கழகம் மானியக் குழு உள்ளிட்ட நிறுவனத்தார் வழியே செயல்பட்ட தமிழ் இலக்கியப் பண்பாட்டு உரையாடல்களும் சில புதிய இலக்கிய வரலாற்று எழுதிய முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நீண்ட நெடிய முன்னெடுப்புகளின் தொடர்ச்சியில் 10 ஆண்டுகளாகத் தென்மொழியிலும், கீற்று இணைய இதழிலும் 'பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்,' பழம்பெரும் தமிழ்ச் சமூகம்' என்ற பெயர்களில் தனி நூல்களாகவும் 2000-ஆவது ஆண்டின் பிறகான காலங்களில் தொடர்ந்து எழுதி வருபவர் கணியன் பாலன். 2016-இல் **பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்,** என்ற நூலை வெளியிட்ட கணியன் பாலன் அந்த நூலின் சாரத்தைச் சுருக்கமாக இப்போது **பழம்பெரும் தமிழ்ச் சமூகம்** என்ற தலைப்பிட்டு 2023-இல் வெளியிடுகிறார்.

21 தலைப்புகள் 264 பக்கங்களைக் கொண்ட இந்த வழி நூலானது தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசரின் மதிப்புரை கணியன் பாலனின் ஆசிரியர்உரையோடு தொடங்குகிறது. அரசியல் முக்கியத்துவம் கொண்ட நூலாக இந்நூலின் மதிப்புரையே சொல்லுகிறது. பெ. மணியரசனின் அரசியலை ஏற்று வழிமொழிந்ததை பாலனின் ஆசிரிய உரையும் எதிரொலிக்கிறது. பிற்காலச் சோழர் பாண்டியர் ஆட்சிகளின் வீழ்ச்சி என்பதே தமிழரின் வீழ்ச்சி. கி.பி 14-ஆம் நூற்றாண்டில் இருந்து ஆப்கானிய, விஜய நகர, ஆங்கிலேய டில்லி ஆட்சிகளுக்கு உட்பட்ட குடிகளாகத் தமிழர் வாழ்ந்தது தமிழர் அல்லாதவரின் ஆட்சி. இந்தத் தமிழர் அல்லாதவரின் ஆட்சிகளே தமிழரின் தற்சார்பை, தன்னம்பிக்கையைச் சிதைத்தது என்ற மணியரசன் விட்ட இனவாதக் கரடியை இந் நூலின் ஆசிரியர் எந்த முறையியல் சார்ந்த ஆய்வுக்கும் உட்படுத்தவில்லை. பெ. மணியரசனின் அரசியல் பரப்புரை பேச்சையே கணியன் நூல் வரைவு செய்திருக்கிறார் எனக் கொள்ளலாம்.

பழந்தமிழ்ச் சமூகம் என்கிற இந் நூலின் அறிமுகப் பகுதியில் குறுந்தொகை 156□ ஆம் பாடலைப் பற்றி உரையாடிய நிலையில் அன்றையக் காலத்தில் வேதமும் பார்ப்பனர்களும் மதிப்புக்குரியவர்களாக இருக்கவில்லை என்று பாதி உண்மை என்ற அளவில் வாதுரைக்கிறார் பாலன். ஆனால் அது சமூகத்தின் எந்த அடுக்கில் என்பதை அவர் பொருத்திக் காட்டவில்லை. அரசர், வணிகர் என்கிற அடுக்கில் பார்ப்பனியம் தன் தாக்குறவைக் கணக்கு தொடங்கிவிட்டது. திணைக்குடியாகிய பெருந்திரளான மக்கள் (இன்றைய சுட்டில் சூத்திர, பஞ்சமர்) பார்ப்பனிய தாக்குரவுக்கும் ஆளாகவும் இல்லை. மேலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அதனை எள்ளி நகையாடி வந்தனர். குடிகளின் சிறப்பை அரசருக்கு மாற்றீடு செய்வதும் அரசரின் போர் வெற்றிகளையும் ஆட்சி நிர்வாகத்தையும் பொதுமக்களின் மேம்பாடாகக் காட்டுவதும் தான் இந்நூலின் முதன்மையான மோசடியாகும்.

பழந்தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகளாக நகர அரசுகள் இருந்ததாகவும் இந்த நகர அரசில்தான் பழந்தமிழகத்தில் சுதந்திரமான பொருள் முதல் வாத சிந்தனைகள் உருப்பெற்றன என்கிறார்.

பழந்தமிழகத்தின் வளர்ச்சிக்கும் செல்வச் செழிப்பிற்கும் காரணம் இந்த நகர அரசுகள் தாம் என்று சுட்டுகிறார். துறவை மேற்கொண்ட சுதந்திரமான பொருள் முதல்வாத மெய்யியல் சிந்தனைக்கும் மலைபடு பொருள்கள் காடுபடு பொருள்களான திணை குடிகளின் உழைப்பில் திரட்டியும் கடல் கடந்த நாடுகளுக்கு உள்ளூர் அரசர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதற்கான முனையங்களே துறைமுகப் பட்டினங்கள் ஆகும். அதுவே நகரங்களாக வளர்ச்சியுறுகின்றன. அரசர்கள் இங்கு சேவைக்கு வரியை விதித்து தாங்கள் கொலுவிருக்கும் கோட்டை கொத்தள (படையணி) நகரங்களை விரிவு செய்கின்றனர் அல்லது போர்க் கொள்ளை மூலம் திரட்டிய பொருளை கருவூலத்தில் சேமித்து வைத்தனர். இதில் பொருள் முதல்வாதச் சிந்தனைக்கு ஊக்கமளித்தவர் துறவை வலியுறுத்திய சுதந்திரமான மெய்யியலாளர்களே யொழிய அரசர்களோ அவைக்களப் புலவர்களோ அல்லர். எனவே, பொருள் முதல்வாதச் சிந்தனைக்கும் நகர அரசுகளுக்கும் என்ன தொடர்பு என்பது வேடிக்கையாக இருக்கிறது.

தமிழகம் மீதான மௌரியப் பேரரசின் படையெடுப்பு குறித்தும் அதனைத் தமிழரசுகளின் அன்றைய ஐக்கியக் கூட்டணி முறியடித்தது என்றும் மிகையாய் எழுதுகிறார். தமிழ் அரசுகளின் ஐக்கியக் கூட்டணிக்கான கருத்தியல் அடித்தளம் என்ன என்று பாலன் தெளிவுபடுத்தவில்லை. வைதீகத்தையும் பார்ப்பனியத்தையும் எதிர்த்துப் போராடும் மரபு மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இவை போன்ற பல விடயங்களுக்கான காரணம் என்ன என்பதை நூலில் படித்துப் புரிந்து கொள்ள இயலும் எனச் சுட்டுகிறார். பார்ப்பனியத்தை எதிர்த்து கொள்கை-திட்டம்-தலைமை-அதைச் செயல்படுத்தும் இயக்கத் தொண்டர்கள் என்று களமாடிய "பெரியாரியப் போராட்ட மரபை எதிர்கொள்ளவே" மிக நீண்ட காலமாகப் பார்ப்பனியத்தை எதிர்த்துப் போராடுகிறோம் என்று பெ. மணியரசனின் பரப்புரைப் பேச்சையே பாலன் எழுத்துருவத்திற்கு இடம் பெயர்க்கிறார்.

தமிழ்த தேசிய இனம் தனது புகழ்பெற்ற வரலாற்றுப் பெருமிதங்களை (அரசர், இராணுவ பெருமிதம்) கொண்டுதான் தமிழக மக்களிடம் உள்ள சாதி, மத வேற்றுமைகளை இன்ன பிற பிளவுகளை நீக்கி அவர்களிடையே ஒற்றுமை உணர்வைக் கொண்டு வர முடியும் என்று உத்தி வகுக்கும் நூலாசிரியரின் இந்தக் கருத்து உலகின் எந்தத் தேசிய இனத்தின் போராட்ட வரலாற்றுப் பட்டறிவிலிருந்து பெறப்பட்டது என்பதை விளக்க வேண்டும். சுரண்டல், ஏற்றத்தாழ்வு எனும் முதலாளித்துவக் கொடூரத்தைச் சுட்டிக் காண்பித்து தொழிலாளர்களே ஒன்று திரளுங்கள் என்று அறைகூவி அணியப்படுத்தும் இடதுசாரிகள். பார்ப்பனிய, வைதீக மேலாதிக்கச் சுரண்டலுக்கு எதிராக நாத்திகம், கடவுள் மறுப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, வட முதலாளிகள் எதிர்ப்பு, பகுத்தறிவு, அறிவியல் என்ற வகையில் பார்ப்பன அல்லாதோரே அமைப்பாகுங்கள்; அதிகாரம் பெறுங்கள் என அணி திரட்டுவது பெரியாரிய இயக்க அணுகுமுறை. இது தமிழர்களிடம் படிந்துவிட்ட சாதி, மத வேற்றுமைகளை அகற்றப் போதுமானது இல்லை என்று கருதுகிறாரா? இதற்கு முன்னுதாரணம் கேட்பாராயின் சோவியத்து சோசலிசம், ஐரோப்பிய அறிவொளி வாதம், மொழி, இன மானிட ஓர்மை சிறப்பாகப் பங்களித்துள்ளதைக் காட்ட விரும்புகிறோம். ஆனால் உங்களுடைய வாதத்திற்கான முன்னுதாரணம் செருமன், இத்தாலியில் உருவான பாசிச நாசிச அரசர் மையம் கொண்ட இனமேட்டிமை வாதமே என்பதை மறுக்க முடியுமா? உங்கள் ஆய்வுச் சட்டகமே (Research Paradigm) அதிலிருந்து பெறப்பட்டதுதான் என்பதை ஏற்கிறீர்களா?

அரசர், போர் பெருமிதங்களைச் சொல்வதும், தமிழர் வீழ்ச்சிக்குத் தமிழர் அல்லாதார் அரசுகள் மீது பழியைப் போடுவதும் அண்டை, அயல் இனங்கள் சண்டை இனங்களாக வெறுப்பு வயப்பட்ட அணுகுமுறையாகும். தமிழகத்தின் ஐவகைத் திணையிலும் ஆட்சியாளர்கள் இருந்தனர். இனக்குழு வாழ்க்கையோ ஆட்சி முறையோ இருக்கவில்லை. கணம், குலம் என்ற குருதி வழி அடிப்படையில் தலைவர்கள் இல்லை. ஊர், நிலவியல் பிரிவின் மூலம் தான் தலைவர்கள் இருந்தனர் என்றெல்லாம் புதுப் பாடம் சொல்லுகிறார் கணியன்பாலன். பாரி என்னும் பறம்புமலையின் குடித் தலைவனை அழித்ததுதான் மூவேந்தர்கள் எனும் தமிழரசுகளின் ஐக்கியமா?

இதுவரை தமிழ்நாட்டுப் பொது வரலாற்றுக்கு அடிநிலைத் தரவாகக் கொள்ளப்பட்ட தொல்காப்பிய-பொருளதிகார, புறத்திணையியல் நூற்பாக்களோ சங்க இலக்கியப் புறத்திணைப் பாடல்களோ இந்தக் காலத்தின் அடிக் கருத்தை உள்வாங்கிக் காப்பியமாகச் சற்றுப் பின்னே எழுதப்பட்ட முதலிரு காப்பியங்கள் (சிலம்பு, மணிமேகலை) எதுவும் இந்த அனைவரையும் ஆட்சியாளர் மயமாக்கும் அரசு உருவாக்கம் காணும் வரைவு முறைக்கு ஆதரவாக இல்லை; சாதகமாக இல்லை. பின் கணியன் பாலனிடம் மட்டும் எங்கிருந்து இந்த வரைவு முறை வந்து அமர்கிறது. கிரேக்க எகிப்திய, பாபிலோனிய நகர அரசுகளுக்கு இணையாகவோ அல்லது அதற்கும் முற்பட்ட தென்னிந்திய தீபகற்பத்தில் அரசு உருவாக்கம் ஆட்சியாளர் இருக்கை தென்படுகிறது என்று அவர் நிறுவ விரும்பி இருக்கலாம். பாசிசத்தின் வரலாறு எழுதும் ஊக்கம் தொன்மையையும் வலிமையையும் வலியுறுத்தி எழுதுவதாகும் எனப் பல குமுகவியலாளர்கள் பலமுறை சுட்டிக்காட்டி இருப்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

களப்பிரர் என்ற அரசக் குடியினர் தமிழர்கள் அல்லர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் மூவேந்தர் சிறையில் அடைக்கப்பட்டனர். பாலி (பௌத்த) பிராகிருத (சமண) வைணவ (சமசுகிருத) மொழிகளும் சமயங்களும் தமிழில் அறிமுகமாகி அரச உதவியோடு வளர்ச்சியுற்றன. பார்ப்பனர்களுக்குச் சங்க காலப் பாண்டியர் வழங்கிய வேள்விக்குடி செப்பேட்டின் அடிப்படையில் நில தானம் நடக்கவே இல்லை. ஆகவே, அந்தப் பார்ப்பனனின் வழி வந்தவன் பிற்காலப் பாண்டியரிடம் முறையிட்டு அந்த நிலத்தைத் திரும்பப்பெற்றான் என்பது வரலாற்றுப் புனைவு என்கிற தி.சு. நடராசரின் ஆய்வினை ஏற்று கணியன்பாலாவுனும் அந்தச் செய்திகளைப் புனைவு என்று முன்மொழிகிறார். தொகுத்துரைத்தால் களப்பிரர் ஆட்சிக் காலம் வரலாற்றுத் தரவுகள் போதுமான அளவு கிடைக்காததால் இருண்ட காலம் அல்ல. அந்த ஆட்சியின் தன்மையால், போக்கால், பண்பால் அது இருண்ட காலம் என்கிற முடிவுக்கு வருவதாக உய்த்துணர முடிகிறது. பேராசிரியர் துளசி. இராமசாமியின் ஒளிர்வது களப்பிரர் காலமே என்ற ஆய்வுக்கோ 'புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு ' என்கிற ஆய்வாளர் ஆ பத்மாவதி அவர்களின் அண்மைக் கால ஆய்வுகளுக்கோ கணியன் பாலன் சார்பு நிலை எடுக்கும் தி.சு. நடராசரோ முனைவர் மா. பவானி அவர்களோ எந்த மறுப்புரையும் கேள்விகளும் இதுவரை எழுப்பவில்லை. ஆய்வுதான் முக்கியம் எனில் இந்த வாதத்தை அவர்கள் சிறப்பாகத் தொடருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

மாறாகச் செய்திப் பரப்புரை மட்டும்தான் முக்கியம் எனில் பாசிச கோயபல்சு அணுகுமுறை தமிழ் வரலாற்றுத் துறையை முற்றுகையிடத் துடிக்கிறது என்றே கொள்ள வேண்டும். களப்பிரர் காலத்தில் வைணவ (சமசுகிருதம்) போற்றப்பட்டதெனில் தொடக்கக் கால வரலாற்று எழுத்தியலாளர்களின் வரைவுகளில்□ குறிப்பாக ஐயங்கார்கள், ஐயர்கள், சர்மா, பிள்ளைகள் ஏன் இருண்ட காலம் என்று இதற்குப் பெயரிடுகிறார்கள். சமண பௌத்தத்தின் அற முதல் வாதம், துறவு வினைக் கொள்கை போன்றவை சங்க இலக்கியங்களிலேயே ஏராளமாக இடம்பெற்று வந்திருப்பதைப் பேராசிரியர் பூ ஜார்ஜ் (சென்னை கிருத்துவக் கல்லூரி), முனைவர் சு. மாதவன் (பாவலர் ஏழை தாசன்) பேராசிரியர் ராஜ் கவுதமன், முனைவர் கரு. அழ. குணசேகரன் போன்றோர் தனித்தனி நூல்களாக எழுதி நிலைநாட்டி வந்துள்ளனர். அவர்களோடு அவர்களது கருத்துகளோடு கணியன் பாலன் என்ன விவாதித்து என்னவாகக் கருத்துகளை அறுதியிட்டுக் கொள்ள விரும்புகிறார் என்பதும் தெரியவில்லை. திடுக்கென்று களப்பிரர்கள் பற்றி சொல்லப்படும் சில தகவல்கள் வரலாற்றுப் புனைவு என்பதாகவும் அவர்கள் தமிழ் மன்னர்களுக்கும் சற்றே தளர்வாகத் தமிழ் மெய்யியல்களுக்கும் எதிரானவர்கள் என்ற முடிவை வந்தடைகிறார். ஏன் என்று தெரியவில்லை. வேண்டுமானால் இதற்கு ஒரு காரணம் இப்படி இருக்கலாம். திராவிட என்ற சொல் தமிழ்ச்சொல் இல்லை. அது சங்க இலக்கியத்தில் இடம்பெறவில்லை என்று இன்றைய திராவிட இயக்கங்களுக்கு மறுப்புக் கூறும் போது மணியரசனின் பதில் இருப்பதைப் பலமுறை எதிர்கொண்டது உண்டு. அந்தப் பரப்புரைப் பேச்சுக்கு ஆய்வு நூல் வடிவம் தருவதான ஒரு நோக்கம் இந்த களப்பிரர் எதிர்ப்பு வாதத்திற்கு இருக்க முடியும்.

குறிப்பு:

பிரிட்டிஷ் காலனிய முறையை நடத்திய ஆங்கிலேயர்கள் சோவியத் ஒன்றியத்தின் எழுச்சியைக் கண்டு அஞ்சுவதற்குக் காரணம் அவர்கள் தங்களைப் போல வளமையானவர்கள் இல்லை எனச் செர்மானிய நாசிசமும் தொன்மையானவர்கள் இல்லை என இத்தாலிய (ரோமப்பேரரசு) பாசிசமும் கருதியதே, சோவியத் மீது தானே படையெடுத்துச் சென்று அடக்கி பிரிட்டிசாருக்குப் புரிய வைக்கிறோம் என்பதே அந்த இனமேட்டிமை அணுகுமுறையாகும்.

# செய்தித் துளிகள்..

- 69 ஆவது தேசிய விருதுகள் பட்டியலை ஆகஸ்ட் 24 அன்று தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சரகம் வெளியிட்டது. அதில் பல ஐயங்களும் குழப்பங்களும் நிலவுவதாக எண்ணுகிறேன்.
- அவர்கள் வெளியிட்ட விருது பட்டியலில் ஜெய் பீம், கர்ணன், சார்பட்டா பரம்பரை போன்ற குமுக அக்கறை கொண்ட திரைப்படங்கள் இடம்பெறவில்லை. மாறாக காஷ்மீர் பைல், ஆர் ஆர் ஆர் போன்ற பல திரைப்படத்திற்கு விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.
- தேர்வு(ஜூரி)க் குழுவில் இடம்பெற்றுள்ள எம் எம் ஸ்ரீலேகா அவர்கள், ஆர் ஆர் ஆர் திரைப்படத்திற்காகச் சிறந்த பின்னணி இசைக்கான விருதைப் பெற்ற எம் எம் கீரவாணியின் சகோதரி ஆவார். தேசிய விருதுகளுக்கான விதிமுறைகளின்படி அவரின் வாக்கு எடுத்துக்கொள்ளப்படாது. அவர் வாக்கு செலுத்தவில்லை என்றாலும் மற்ற நடுவர்களை அவர் செல்வாக்குச் செலுத்தக் கூடும். இதனால் இந்தத் திரைப்படத்திற்கு கிடைத்த 6 விருதுகளும் சந்தேகத்திற்குள்ளாகின்றன.
- திரைப்பட விழாக்களின் இயக்ககம் (Directorate of film festivals) – கடந்த ஆண்டு டிசம்பர் 31 அன்று இந்திய தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (NFDC) என்ற அமைப்புடன் சேர்க்கப்பட்டது. ஆனால் nfdc நிறுவனம் திரைப்படங்கள் தயாரிப்பதால் இந்தத் தேசிய விருதுகளையும் அவர்கள் செய்ய இயலாது என்பதால் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் இந்த ஆண்டு நேசனல் பிலிம் அவார்ட்சு செல் என்ற ஆணையத்தை உருவாக்கி அமைச்சகத்தின் கீழ் வைத்திருந்தது. ஆனால் நடுவர்(ஜூரி) தேர்வு செய்தவுடன், அதன் நகலை nfdc இடம் பகிர்ந்துள்ளது. அது மட்டுமின்றி எந்த அரசாணையும் இன்றித் தேசிய விருதுகள் தொடர்பான அனைத்து பண பரிவர்த்தனைகளை அந்த நிறுவனத்திடம் ஒளிவு மறைவாக தந்துள்ளது. குறிப்பாக இந்த விருதுப் பட்டியலில் nfdc தயாரித்த ஒரு திரைப்படமும் விருது வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமின்றி சென்ட்ரல் பேனல் எனப்படும் இறுதிச் சுற்றில் nfdc நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் இருக்கிறார். இதன் மூலம் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. nfdc நிறுவனம்தான் இந்த ஜூரிகளுக்கான சிட்டிங் பீ எனப்படும் தொகையையும் தருகிறது. அது மட்டுமின்றி இந்தத் தேசிய விருதுக்கான திரையிடல் nfdc நிறுவனத்தில்தான் நடந்துள்ளது. இதன் மூலம் குறிப்பாக விருது பரிந்துரைப்பில் பல அரசியல் தலையீடுகள் இருந்துள்ளன.
- தேர்வு(ஜூரி)க் குழுவில் முக்கியமாக அணைத்து தேர்வு உறுப்பினர்களும் பா. ச. க-வை சார்ந்தவர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். ஆகவே நல்ல நல்ல திரைப்படங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
- தேசியத் திரைப்பட விருதுகளின் விதிமுறைகளின்படி மறுஆக்க(ரீமேக்)த் திரைப்படங்கள் போட்டியில் பங்கேற்க இயலாது. ஆனால் அதை உடைக்கும் விதமாக மிமி என்ற தலைப்பு கொண்ட இந்தி மொழித் திரைப்படம் விருது வென்றுள்ளது. இத் திரைப்படம் அதிகாரப்பூர்வமாக மராட்டியப் படத்தைத் தழுவி எடுத்ததாகும்.
- இத்தகைய பல குளறுபடிகள் இதில் உள்ளன. மேலும் குறிப்பாக nfdc யின் தலையீடால் இந்த விருதுகளின் மீது மேலும் பல ஐயங்கள் வலுக்கின்றன.

**• தில்லிநம்பி**

## தேசியக் கல்விக் கொள்கை-2020-ஐ, எந்த மாநிலமும் எதிர்க்கவில்லை, மாறாக ஒரு சில மாநிலங்களே சிறிய அளவிலான மாற்றங்களை மட்டுமே பரிந்துரைத்துக் கடிதங்கள் கொடுத்திருப்பதாக ஒன்றியக் கல்வித்துறை இணை அமைச்சர் திரு சுபாசு சர்க்கார் தெரிவித்துள்ளார்..

இது அக்டோபர் 11 நாளில் வெளிவந்த தினமணி நாளிதழ் கொடுக்கும் செய்தி.

இந்தி எதிர்ப்பும், இரு மொழிக் கொள்கையையும் கொண்ட தமிழ்நாட்டுக்குத் தேசியக் கல்விக் கொள்கை ஏற்புடையதல்ல.

அதனுடைய முக்கிய நோக்கமே இந்திய அளவில் உயர் கல்வி பெறும் மாணவர்களை 2035 ஆவது ஆண்டுக்குள்ளாக 50 விழுக்காடு அளவுக்கு உயர்த்துவதும், 2050 ஆவது ஆண்டுக்குள்ளாக 100 விழுக்காடு அளவுக்கு எட்டுவதுமாக இலக்கு வைத்துக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கிறது.

தமிழ்நாட்டின் முதன்மை அரசியல் கட்சிகளான திமுக, அதிமுகவுக்கிடையே பல்வேறு கருத்து, கொள்கை முரண்கள் இருந்தாலும், மொழிக் கொள்கையில் மும்மொழித் திட்டத்தை ஒருமித்த கருத்தோடு ஏற்றுக்கொள்வதில்லை என்று அறிவிக்கின்றன. தேசியக் கல்விக் கொள்கையின் முதன்மை நோக்கமே தாய்மொழிக் கல்வியோடு ஏதாவது ஒரு இந்திய மொழியைக் கட்டாயம் கற்க வேண்டும் என்பதே ஆகும். இந்தி என்று நேரடியாகச் சொல்லாமல், ஏதாவது ஒரு இந்திய மொழி என்று மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் செயலாகவே இது பார்க்கப்படுகிறது. மேலும் ஐந்தாம் வகுப்பில் இருந்து ஏதாவது தொழிற்கல்வியையும் இணைத்தே கற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், ஐந்து, மூன்று, எட்டாம். வகுப்பு மாணவர்களுக்கும் பொதுத் தேர்வின் அடிப்படையில் தேர்ச்சிகள் அமையும் என்கிற முடிவும் இயல்பான கல்விச் சூழலிலிருந்து மாணவர்களை ஒருவிதப் பதட்ட மனப்பான்மைக்கு இட்டுச் சென்று விடும் என்றே தோன்றுகிறது

ஒருவர் அவரின் தேவைக்கேற்ப எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம், அது அவர்களின் உரிமை சார்ந்தது. ஆனால் இந்தியைக் கட்டாயம் கற்றே ஆக வேண்டும் என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்திய ஒன்றிய அரசின் இறுதி இலக்கு என்பது "ஒரே நாடு ஒரே மொழி" என்ற அடிப்படையில் இந்தியாவின் பொது மொழியாக இந்தியைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதே. இந்தியை ஏற்றுக் கொண்ட வட மாநிலங்கள் குறிப்பாக குசராத், உ.பி, பீகார் கூடத் தங்களது தாய்மொழியை மறந்து, இந்திக்கு அடிமையான நிலையைப் பார்க்கிறோம். அந்த நிலை தமிழ்நாட்டிற்கோ, தமிழுக்கோ வந்து விடக்கூடாது என்பதாலேயே, இங்கு இந்தி எந்த வடிவத்தில் திணிக்கப்பட்டாலும், அதைத் தமிழ்நாடு தீவிரமாக எதிர்க்கிறது. மேலும் உயர் கல்வியைப் பொறுத்தவரை இந்தியாவின் எந்த மாநிலத்தையும்விட தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதைப் பல்வேறு புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

மேலும், மாநிலங்களின் அடையாளங்களை, வரலாற்றை, பண்பாட்டை என அனைத்தையும் தேசியக் கல்விக் கொள்கை சிதைக்கவே செய்யும் என்பதையும் அறியலாம்.

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களின் நிலை 26.3 விழுக்காடாக உள்ளது. அதுவே உ.பி, பீகார் போன்ற மாநிலங்களில் 20 விழுக்காடுகளுக்கும் குறைவாகவே உள்ளன. ஆனால் தமிழ்நாடு சில வளர்ந்த நாடுகளை விடக் கூடுதலாக 51.4 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. 2035இல் இந்தியாவின் இலக்கே, 50 விழுக்காடு என்ற அளவில் தான் உள்ளது.

ஆகையால் தமிழ்நாட்டுக் கல்வி முறை என்பதோ, மொழிக் கொள்கை என்பதோ சிறந்த மாணவர்களை உருவாக்கப் போதுமானதாக உள்ளது. தேவைப்படும் அளவில். இன்னும் கூடுதல் தரத்துடன் கல்வியாளர்கள் குழுவைக் கொண்டு தரமான கல்விச் சூழலை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையைத் தேவைப்படும் மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும். கல்வியில் சிறந்த தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்பதே தமிழர்களின் பொதுக் கருத்தாக உள்ளது.

**• தமிழ்முகம்**

# வாச்சாத்தி வன்கொடுமையும் போராட்டமும்

**த.சிவராமன்**
தமிழ்நாடு மக்கள் கட்சி

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பேதாம்பட்டி ஊராட்சி வாச்சாத்தி கிராமத்தில் சந்தன மரம் கடத்தல் தடுப்பு என்றும் தேடுதல் வேட்டை என்ற பெயரிலும் 18 இளம் பழங்குடி பெண்களைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் ,சென்னை உயர் நீதிமன்றம் செப்டம்பர் 29-2023 தீர்ப்பை வழங்கியது, இதில் கீழமை நீதிமன்றமான மாவட்ட அமர்வு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை உறுதி செய்ததோடு குற்றவாளிகளின் மேல்முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்துள்ளது, இந்தத் தீர்ப்பின் மூலம் அதிகார வர்க்கத்தின் சூழ்ச்சிகளும் அவர்களால் கட்டமைக்கப்பட்ட பொய்களும் உடைந்து நொறுங்கி உள்ளன.

சித்தேரி மலை கிராமத்தில் அமைந்துள்ள வாச்சாத்தி கிராமம் 156 வீடுகளும் 655 மக்கள் தொகை கொண்ட ஊராக இருந்தது, பெரும்பாலும் உழவில் ஈடுபடுவதும் காடுகளில் விறகு வெட்டுவதும் இவர்களின் வேலை. இயற்கை சூழ்ந்த அழகிய சிற்றூர்..

**சந்தன மரக் கடத்தல் தேடுதல் வேட்டை**

1992 சூன் 20-ஏறத்தாழ 40 பேர் கொண்ட வனத்துறை அதிகாரிகள் மற்றும் வன காவலர்கள் சித்தேரி மலையில் இருந்து கீழே இறங்கி ஆற்று ஓரத்தில் பதுக்கி வைக்கப்பட்ட சந்தன மரக் கட்டைகளைக் கண்டுபிடித்தனர், அருகில் உழவு வேலை செய்து கொண்டிருந்த பெருமாள் என்பவரிடம் யார் இந்த மரக் கட்டைகளைப் பதுக்கி வைத்தது என வனத் துறை அதிகாரி சிங்காரவேல் கேட்டார், அதற்குப் பெருமாள் எனக்குத் தெரியாது என சொல்லவே வனத்துறைக் காவலர் ஒருவர் பெருமாள் மீது தாக்குதல் நடத்தினார். இதைக் கேள்விப்பட்டு வாச்சாத்தியில் இருந்து வந்த ஏறத்தாழ 40 பேர் பெருமாளை பாதுகாக்க காவலர்கள் அடித்ததைத் தடுத்தனர், வனக் காவலர்கள் தடுத்த அனைவர் மீதும் தாக்குதல் நடத்தினர், இதில் வாச்சாத்தி மக்கள் திருப்பித் தாக்கியதில் செல்வராஜ் என்கின்ற வனக் காவலர் படுகாயம் அடைகிறார், படுகாயம் அடைந்த காவலரை அந்த இடத்தில் விட்டுவிட்டு அனைத்து வனத்துறையினரும் அரூருக்கு சென்று விடுகின்றனர் .

படுகாயம் அடைந்த வனக் காவலர் செல்வராசுக்கு தண்ணீர் கொடுத்தும் நீராகாரம் கொடுத்தும் மாட்டு வண்டியில் அவரை அழைத்துச் சென்று அரூர் மருத்துவமனையில் சேர்த்தனர்

**18 பழங்குடியின பெண்கள் பாலியல் வன்கொடுமை**

மாலை சுமார் 3 மணி அளவில் வாச்சாத்திக்கு 270 க்கும் மேற்பட்ட வனத் துறை, காவல் துறை, வருவாய்த் துறையினர் (அதில் உயரதிகாரிகள் உட்பட) ஊரைச் சுற்றி வளைத்தனர். அந்தச் சூழலை உணர்ந்த வனக் காவலர்களிடம் தகராறில் ஈடுபட்டவர்களும் மலை ஏறக் கூடியவர்களும், மலையில் ஏறிப் பதுங்கிக் கொண்டனர். மலையேற முடியாதவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஊனமுற்றோர் குழந்தைகள் பெண்கள் மட்டுமே ஊரில் இருந்தனர்,

ஆறு மணி அளவில் ஊருக்குள் காத்திருந்த அதிகார வர்க்கக் கும்பல் வீடு வீடாகச் சென்று அனைவரையும் இழுத்து வந்து ஆலமரத்து அடியில் வைத்து, நிர்வாணப்படுத்தி அடித்துச் சித்திரவதை செய்தனர். பிறகு அதிலிருந்து 20 வயதிற்கு உட்பட்ட பெண்களை மட்டும் பிரித்து எடுத்து லாரியில் ஏற்றி ஆற்றங்கரைக்குக் கொண்டு சென்றனர். இதைக் கண்ட பணியில் இருந்த பெண் காவலர் ஒருவர் பெண்களை ஏற்றி செல்கிறீர்களே உங்களோடு நாங்களும் வருகிறோம் என்றதற்கு நீங்கள் வரவேண்டாம். கட்டையை காட்டுவதற்கு தான் அழைத்து செல்கிறோம் என்று சொல்லிவிட்டு அழைத்துச் சென்றனர். அதிகார வெறி பிடித்த காம வெறி பிடித்த கும்பல் 13 வயது சிறுமி உட்பட 18 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தனர். இந்தக் கொடுமையை மலை மேல் பதுங்கியிருந்த ஊர் மக்களும் அந்த பெண்களின் பெற்றோர்களும் கண்டு கதறித் துடித்தனர்,

**சித்திரவதையும் பொய் வழக்குகளும்**

பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட 18 பெண்கள் உட்பட ஊரில் உள்ள அனைவரையும் அரூர் வனத்துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று, இரவு பகல் தூங்கவிடாமலும் தண்ணீர் உணவு கொடுக்காமலும் சிறுநீர் கழிக்க விடாமலும் தொடர் சித்திரவதை செய்து உள்ளனர், 133 பேர் மீது சந்தன மரம் கடத்தியதாக (எஸ்.டி.ஓ.ஆர்) என்ற சட்ட பிரிவில் மூன்று வழக்குகளும் அரசு ஊழியர்களைத் தாக்கியதாக ஒரு வழக்கும் மொத்தத்தில் நான்கு வழக்குகள் போடப்பட்டுச் சேலம் நடுவண் சிறையில் அடைத்தனர். இந்தச் சித்திரவதை மற்றும் பொய் வழக்குகளில் 90 பெண்கள் 15 ஆண்கள் 28 குழந்தைகள் உட்படுத்தப்பட்டனர்.

சிறையில் அடைக்கப்பட்ட 18 பெண்களுக்கும் பிறப்பு உறுப்பில் ரத்தக்கசிவு ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளனர், சிறை மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கப்பட்டுள்ளது, இதில் ஒன்பது மாதக் கர்ப்பிணிக்குக் குழந்தை பிறந்து ஊட்டச்சத்து பற்றாக்குறை காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளது,

**பழங்குடிகளின் வாழ்வாதாரம் சூறையாடப்பட்டது**

சூன் 20, 21, 22 ஆகிய நாட்களில் வாச்சாத்தியில் முகாமிட்டிருந்த அதிகார வர்க்கக் கும்பல் அங்கிருந்த வீடுகள் அனைத்தையும் உடைத்து நொறுக்கின. வீட்டிலிருந்த அரிசி, பருப்பு, சாமை, கேழ்வரகு மற்றும் அனைத்துப் பொருள்களையும் அடித்து நொறுக்கி மண்ணெண்ணெய் ஊற்றி நாசமாக்கினர். அதுபோலவே அந்த மக்களின் குடிநீர் ஆதாரமாக இருந்த கிணற்றில் கோழிக் கழிவை கொட்டியும் மண்ணெண்ணெய் ஊற்றியும் அசுத்தப்படுத்தினர்.

சிறைப்படுத்தப்பட்டவர்கள் போக மீதம் ஊரில் இருந்த 500க்கும் மேற்பட்டோர் பயந்து அஞ்சி நடுங்கி சித்தேரி மலையில் ஏறி உணவு இன்றியும், குடிக்கத் தண்ணீர் இல்லாமலும் காடுகளில் பதுங்கி இருந்தனர், பிறகு பக்கத்தில் இருக்கும் ஊர்களில் அடைக்கலம் (தஞ்சம்) புகுந்தனர்,

**குற்றவாளிகளைப் பாதுகாத்த ஜெயலலிதா அரசு**

சொந்த நாட்டு மக்கள் மீது ஈவு இரக்கமற்று இப்படி ஒரு கொடுஞ்செயலைச் செய்துவிட்டு, அன்றைய வனத்துறை அமைச்சராக இருந்த செங்கோட்டையன், மாவட்ட ஆட்சியர் தசரதன், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் ராமானுசம் அனைவரும் அரூரில் கூடி இப்படி ஒரு சம்பவமே நடக்காதவாறு அனைத்தையும் மூடி மறைத்துவிட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் தோழர் சண்முகம், தோழர் அண்ணாமலை, சிபிஎம் கட்சியின் மாநிலச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் நல்லசிவம் அவர்களும் தலையிட்ட பிறகு கட்சியின் வழிகாட்டுதலில் மக்கள் போராட்டமாகவும் சட்டப் போராட்டமாகவும் நகரத் தொடங்கியது .

சட்டமன்றத்தில் இந்தச் சிக்கல் குறித்து விவாதித்தபோது வனத்துறை அமைச்சர் செங்கோட்டையன் வாச்சாத்தியில் பழங்குடிகள்தாம் வனக் காவலர்களைத் தாக்கினார்களே தவிர 18 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் அவர்கள் வீடு தாக்கப்பட்டதாகவும் பொய் புகார் கொடுத்துள்ளனர் எனப் பேசினார்.

சிபிஎம் கட்சியின் சார்பாக உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் மாநில அரசு சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஆர்,டி,ஓ விசாரணை அறிக்கை ஒன்றும், தமிழ் தெரியாத பெண் ஐ,பி,எஸ் அதிகாரியின் விசாரணை அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த இரண்டு விசாரணை அறிக்கையும், 18 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படவில்லை எனவும் பழங்குடிகள் தங்களது வீட்டைத் தாங்களே உடைத்துக் கொண்டு பொய்யாகக் குற்றம் சாற்றுகிறார்கள் என்றும் அதில் குறிப்பிட்டு இருந்தது,

இந்த வழக்கில் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாகவும் அதிகாரிகளாகவும், படித்தவர்களாகவும் இருப்பதனால் இவர்கள் இதே போன்றக் குற்றத்தை செய்வதற்கு வாய்ப்பே இல்லை என்று வழக்கினைத் தள்ளுபடி செய்தது,

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் இந்த வழக்கை மீண்டும் உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. இந்த வழக்கை மீண்டும் விசாரித்த உயர் நீதிமன்றம் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட்டது. அன்றைய செயலலிதா அரசு இதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்று இந்த வழக்கை சி.பி.ஐ விசாரிக்கக் கூடாது என்றும், இதைத் தமிழக காவல்துறைதான் விசாரிக்க முடியும் என்றும் வாதாடியது, இந்த வழக்கில் தமிழக அரசு மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து இறுதியாக சி.பி.ஐ விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததின் பேரில் உசாவல்(விசாரணை) தொடங்கியது.

**கருணாநிதி அரசும் குற்றவாளிகளைப் பாதுகாத்தது**

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகு 1996 ஆம் ஆண்டு குற்றவாளிகள் 269 பேர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் அன்றைய கருணாநிதி தலைமையிலான அரசு குற்றவாளிகளின் உறவினர்கள் சாலை மறியல் செய்தார்கள் என்று காரணம் சொல்லித் தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை மதிக்காமல் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்ட மறுநாளே விடுதலை செய்யப்பட்டனர்,

தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் வழங்க வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை மாறி மாறி ஆட்சியில் இருந்த திமுக மற்றும் அதிமுக அரசுகள் வழங்காமல் இழுத்தடித்து வந்தன.

**மக்கள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி**

269 பேரும் குற்றவாளிகள் என்றும் 54 பேர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வழக்கு நடக்கும் காலங்களிலே இறந்து விட்டதால் மீதமுள்ள 215 பேரும் குற்றவாளிகள் எனவும் 126 வனத்துறையினர் 84 காவல்துறையினர் 5 வருவாய்துறையினர் அங்கும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலைக்குப் பத்து இலட்சம் இழப்பீடு அரசு வழங்க வேண்டும் என்றும் அதில் 5 இலட்சத்தைக் குற்றவாளிகளிடம் இருந்து வசூலிக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்றும் அல்லது சுயதொழில் ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும் என்றும் அவர்கள் இறந்து போகும் பட்சத்தில் அவருடைய குடும்பத்தாருக்கு வழங்க வேண்டும் என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்ப்பினை நீதிபதி வேல்முருகன் வழங்கினார், இப்படிப்பட்ட தீர்ப்பு வழங்கியிருந்தாலும் இந்தப் பத்து லட்சம் இழப்பீட்டுத் தொகைக்காகவும் அரசு வேலைக்காகவும் மீண்டும் இந்த மக்கள் எத்தனை ஆண்டுகள் போராட வேண்டி இருக்குமோ தெரியவில்லை,

சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளும் அதிகார வர்க்கமும் ஆளும் வர்க்கக் கட்சிகளும் இணைந்துதான் சந்தன மரத்தை வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் கடத்திவந்தார்கள் என்பது ஊர் அறிந்த கதை. ஆனால் அப்பாவி பழங்குடிகளைச் சந்தன மரம் கடத்துகிறார்கள் என்று திசை திருப்புவது மட்டுமல்லாமல் சொந்த மக்கள் மீது இப்படி ஒரு கொடூரத்தைச் செய்துவிட்டுக் குற்றத்திலிருந்து தப்பிக்க அரசும் அதிகார வர்க்கமும் எடுத்த அனைத்து முயற்சிகளையும் மக்கள் போராட்டத்தின் மூலம் உடைத்து எரிந்துள்ளதுடன் இந்த வழக்கின் மூலம் ஆளும் வர்க்கக் கட்சிகள் அதிகார வர்க்கங்கள் அனைத்தும் பட்டியலின - பழங்குடிகள் - உழைக்கும் மக்களின் எதிரி என்பதை உணர முடிகிறது.

# இந்தியா யார் அப்பன் வீட்டுச் சொத்தும் இல்லை; தேசிய இனங்களின் சொத்து!

## 1989 இல் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறிக்கை!



"இந்தியா பிரியக்கூடாது; இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் பல்வேறு மொழி பேசுபவர்களாகவும், பல்வேறு கலை, பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும், உடையவர்களாகவும், இருந்தாலும் பல்வேறு சாதிப் பிரிவுகளையும் மதப் பிரிவுகளையும் கொண்டவர்களாகவும் இருந்தாலும் அவர்கள் தங்களின் வேறுபாடுகளையும் பிரிவுகளையும் மறந்து(!) ஒற்றுமையுடையவர்க ளாகவும், ஒருமையுணர்வு பெற்றவர்களாகவும் இந்திய தேசியம் என்னும் ஒரு நாட்டுணர்வு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்" என்று இக்கால், வரலாறும், வாழ்வியலும் அறியாத பலரும் கூறிக் கற்பனைக்கனா கண்டு வருகிறார்கள்.

இந்தியா யார் அப்பன் வீட்டுச் சொத்தும் இல்லை; அஃது இங்குள்ள தேசிய இனங்கள் அனைத்துக்கும் சொந்தமான சொத்து ஆகும். இதை முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆண்ட வெள்ளைக்காரர்களை ஏமாற்றி, அல்லது சமநிலைத் தரகு (பேரம்) பேசி அவர்களிடமிருந்து எக்குத் தப்பாக - ஒற்றுக்குத்தலாகத் தங்கள் ஆளுமைக்கு ஏற்றுக் கொண்ட வடவாரியப் பார்ப்பனர்களும். வல்லரசுகளின் அடிநிலை முதலாளிகளும், இந்தியா பிரியக் கூடாது. பிரிக்க விட மாட்டோம் என்று ஏகடியமும் எகத்தாளமும் கொண்டு பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கு, பிரிவினை கூடாது என்று கூறுவதற்குப் பிறர்க்கு எத்துணை உரிமை உண்டோ, அத்துணை உரிமை உண்டு, நாங்கள் பிரிவினை வேண்டும் என்பதற்கும்!

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்துதான்! என்றும் மாறாதது, அல்லது மாற்ற முடியாத இயற்கை நெறியன்று. இவர்கள் கூறுவதுபோல் இந்தியா என்றுமே ஒன்றாக இருந்ததில்லை. வரலாற்றுக் கெட்டாத காலந் தொட்டு, இதில் பல்வேறு இன மக்கள், அவர்களின் சிறியதும் பெரியதுமான பல்வேறு மொழிகள், அவை தழுவிய கலை, பண்பாடுகள், நாகரிகங்கள், பழக்கவழக்கங்கள், கடவுள் கொள்கைகள், ஆட்சி முறைகள் முதலியவை என்றுமே இந்தியாவை ஒன்றாக, ஒரே தன்மையாக இருக்கவிட்டதில்லை. எனவே, இந்தியா ஒன்றாக, ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்பதும் ஒரு பொருளற்ற ஆட்சிப் பேராசைக் கொண்ட வெறுங் கருத்துதான். அதனை இயற்கையாக்கிவிட வடநாட்டிலுள்ள அரசியல் வீணர்கள் சிலர் கற்பனைக்கனாக்கண்டு வருவதும், அக்கனவை நனவாக்க இங்குள்ள சில அடிவருடிகளும், பதவி மோப்ப நாய்களும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்காந்து திரிவதும் வேடிக்கையிலும் வேடிக்கையாகப் போய்விட்டது. மேலும். இயற்கையே காலப்போக்கில் பல்வேறு படிநிலை மாறுதல்கள் அடையும்போது, இப்பொருளற்ற புன்னிலைப் பொய்க் கருத்துகள் மாறுபாடு அடைவதற்கு என்ன தடையாக இருக்கமுடியும்! இவ்வகையில் இந்தியா ஒன்றாக இருப்பதைத் தங்கள் வாழ்க்கைக்கு ஊதியமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஒருவகைத் தந்நலக் கூட்டமே, பிரிவினை வேண்டாம். ஒற்றுமை வேண்டும். ஒருமைப்பாடு வேண்டும் என்று முரண்டு பிடிக்கின்றனர்.

ஓர் ஐந்தாண்டுக் காலம் ஆட்சி செய்ய வந்தவர்கள் 'இந்தியாவைப் பிரிக்கவிட மாட்டோம்' என்று கூறுகின்ற அளவில் அதிக உரிமை கொண்டாடுவது வல்லதிகார மனப்பாங்கே தவிர வேறில்லை. வலிவும் பொலிவும் பெற்றிருந்து அவற்றைக் காலப் போக்கில் இழந்து நிறகும் ஒரு தேசிய இனத்தை, சாதி, மத அரசியல் பொருளியலால் வல்லாண்மை பெற்று, நிற்கும் ஓர் இனத்தவர்கள் தங்கள் ஆளுமைக்குக் கீழ்தான் அடங்கி ஒடுங்கி உரிமையிழந்து வாழ்விழந்து கிடக்க வேண்டும் என்று கூறுவதற்கு என்ன உரிமையிருக்கிறது? தாக்குண்ட இனம் ஒட்டியிருக்க விரும்பினால் ஒட்ட வைத்துக் கொள்வதிலும் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் பேசுவதிலும் தவறில்லை. ஆனால் விரும்பத் தகாத ஒட்டுறவினின்று விடுபட்டுப் பிரிந்து போய், முழு உரிமை யுள்ள தனி நிலை ஆட்சி அமைத்துக் கொள்ள விரும்பும் ஓரினத்தைச் சட்ட திட்டங்களாலும், ஆளுமைத் தந்திரச் சூழ்ச்சிகளாலும் அடக்கு வன்முறைக ளாலும், கிடுக்குப் பிடி போட்டு, ஒடுங்கியே கிட என்று சொல்வது எந்த வகையில் மாந்த நேயமும், மக்கள் ஞாயமும் ஆகும் என்று நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை... இவ் விழிநிலைக் கோட்பாடுகளால் இந்தியா பிளவுபடக் கூடாது என்பதற்கோ, தமிழ்நாட்டுப் பிரிவினை கூடாது என்பதற்கோ, அல்லது இங்குள்ள தேசிய இனங்கள் பிரிந்து போக ஒப்பமாட்டோம் என்பதற்கோ யாருக்குமே உரிமையில்லை என்று தெளிவாக உணர்ந்து கொள்க! தேசிய இன விடுதலை இயற்கையானது; தேவையானது!

- **திசம்பர்,** 1989

# சென்னிமலையில் பா ஜ க வின் பித்தலாட்ட அரசியல்..!

● **கி வே பொன்னையன்**

மக்களின் சாதி, மத உணர்வுகளையும் சாதி மத அடிப்படையில் மக்களுக்கு இயல்பாகவே இருந்து வரும் வேறுபாடுகளையும் பயன்படுத்தி வெறுப்பு அரசியல் செய்வதுதான் பாரதிய ஜனதா கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும் .மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிளவுபட்டிருந்தாலும் வரலாற்று வழியில் சமுதாய உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் தற்போது இணைந்து வளர்ந்து வருகிறார்கள்.

மக்களுக்கிடையில் வரலாற்று வழியில் ஏற்பட்டுள்ள இந்த வேறுபாடுகளை, முரண்பாடுகளாக மாற்றி வெறுப்பு அரசியலை வளர்த்து ரத்தம் சிந்தும் கலவரங்களாக மாற்றுவது தான் பாஜகவின் அரசியல் வியூகம்,

கீழ் பவானி கால்வாய்ச் சீரமைப்பு பணிகளில் விவசாயிகளிடையே இரு வேறு கருத்துகள் இருந்தன ஆனால் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு சீரமைப்பு வேலைகள் செய்வதில் ஓர் இணக்கம் ஏற்பட்டது.

கீழ்பவானி விவசாயிகளிடையே இருந்த இந்த முரண்பாட்டை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட வழியில் முடிவுக்குக் கொண்டு வந்தது. அதை நிர்வாக வழியில் செயல்படுத்துவதற்கு அமைச்சர் முத்துசாமி அவர்கள் நிர்வாக ரீதியான முயற்சியில் ஈடுபட்டு வந்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை மதித்துத் தவறான பயனாளிகளைப் பாஜக முறைப்படுத்தியிருக்கவேண்டும். மாறாகத் தவறான பயனாளிகளைத் தூண்டி விட்டுத் தங்கள் பக்கம் திரட்டிக் கொள்ளும் ஒரு கேடுகெட்ட அரசியலைப் பாரதிய ஜனதா கட்சியின் விவசாயப் பிரிவுத் தலைவர் ஜி கே நாகராஜன் மூலம் வேகமாகத் தொடங்கி செய்து வந்தார்கள். தங்களுக்குள்ள கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு ஒரு பதட்ட அரசியலைச் சில மாதங்கள் செய்து கீழ் பவானி, பவானி மறுசீரமைப்பு வேலைகளைச் சீர்குலைத்தார்கள்.

சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி வேலைகள் நடைபெறுவதற்கு மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களோடு விவசாய சங்கத் தலைவர்களை வைத்துக் கலந்து பேசினார். ஓர் இணக்கமான சூழலை ஏற்படுத்த நேரடியாகவே களத்துக்கு விவசாய சங்கத் தலைவர்களோடு பயணித்து வந்தார். நீர்வளத் துறை அமைச்சரின் நேரடி வழிகாட்டலில் சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் எடுத்திருக்கும் இந்த அரிய முயற்சியை முறியடிக்க பாரதிய ஜனதா கட்சி தனது சதித்திட்டத்தை அரச்சலூரில் அரங்கேற்றியது. அரச்சலூரில் பெரும் கலவரச் சூழலை தமிழரசன், பூபதி போன்ற நபர்கள் மூலம் உருவாக்கினர்.

கீழ்பவானி பிரச்சனை தற்போது சற்று ஓய்ந்த நிலையில் புதிதாகக் கலவரத்தை உருவாக்கக் கத்தக்கொடிகாட்டில் கிறிஸ்தவ வழிபாடு நடத்தி வரும் நாடார் சமூகத்தைச் சார்ந்த ஏழை விவசாயத் தொழிலாளி அர்ச்சுனன் என்பவர் குடும்பத்தினரை வீடு புகுந்து தாக்கிப் பதட்ட சூழல் உருவாக வித்திட்டனர்.

அர்ஜுனன் குடும்பத்தினர் மீது இந்து முன்னணி நடத்திய கொடூர வன்முறைத் தாக்குதலைத் தமிழ்நாட்டின் அனைத்து சனநாயக சக்திகளும் கண்டித்தனர். தமிழக அரசும் தன் பிரதிநிதியை அனுப்பி வைத்துமுறையாக வழக்குப் போட்டு நடவடிக்கையும் எடுத்துவிட்டது.

இந்நிலையில் சரவணன் என்கிற ஜோசப்பை சென்னையிலிருந்து சென்னிமலைக்கு அனுப்பி "சென்னிமலையைக் கல்வாரி மலையாக மாற்றுவோம்" என்றும் "இந்துக் கோயில்களை எல்லாம் அகற்றுவோம்" என்றும் பேச வைத்தார்கள்.

உள்ளூர் போலீஸ் சரவணன் (எ) ஜோசப் கும்பலுக்கு அனுமதி கொடுக்கவில்லை. சென்னையிலிருந்து சரவணன் அனுமதிபெற்று வந்ததாகக் காவல்துறை வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

சரவணன் என்கிற ஜோசப் தனக்கு அடையாளம் தெரிந்தவர் ஒருவர் கூட இல்லாத சென்னிமலையில் ஒரே இரவில் நூற்றுக்கணக்கான சுவரொட்டிகளைத் தன் படத்தோடு ஒட்டி இருந்தார்.

இதிலிருந்து இந்த நபர் ஆர்எஸ்எஸ் இன் கைக்கூலியாக வந்திருக்கிறார் என்பதை அப்பொழுதே பலரும் சந்தேகத்தினர். (சரவணன் என்கிற ஜோசப் இந்து முன்னணி முக்கியத் தலைவர்களோடு இணைந்து எடுத்த நிழல் படங்களும் தற்போது இணையத்தில் பரவி வருகிறது)

சரவணன் கும்பலின் உணர்ச்சியைத் தூண்டும் பேச்சுகளை எடுத்துக்கொண்டு சென்னிமலை கோயிலைக் கைப்பற்ற கிறித்தவர்கள் வந்து விட்டார்கள் "வாருங்கள், வாருங்கள்" என்று கூறி அக்டோபர் - 13ஆம் நாள் பதட்டப்பட்ட மக்களின் ஒரு பெரும் கூட்டத்தை இந்து முன்னணி பதாகையின் கீழ்த் திரட்டி விட்டார்கள்.

ஆனால் இது பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அரசியல் என்பதைப் புரிந்து கொண்ட முருக பக்தர்கள் அமைப்பு உடனடியாக இந்த ஏமாற்று வேலையைக் கண்டித்து மறுநாளே விரிவான அறிக்கையை வெளியிட்டு அம்பலப்படுத்தியது

சென்னிமலைப் பிரச்சனையில் மட்டுமல்ல மொத்த சமூகத்தில் சனாதன சக்திகள் செய்து வரும் அனைத்து வேலைகளையும் புரட்சிகர சனநாயக சக்திகளோடு இணைந்து எதிர்த்துப் போராடிவரும் என்னை இலக்காக்கி என்னை முடக்குவதற்கான வெளிப்படையான முயற்சிகளில் இறங்கினார்கள்.

இந்து முன்னணி கும்பலின் சதி வேலையைப் புரிந்து கொண்டு குறிப்பிட்ட பிரிவினருக்கு உண்மையான விளக்கத்தை நான் கொடுத்தவுடன் அனைவரும் ஏற்றுக் கொண்டு அமைதியாகிவிட்டார்கள்.

சென்னிமலையில் உருவாக்கப்பட்ட பதட்ட நிலையைப் போக்கும் வகையில் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டல்படி மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் உள்ளூர் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களோடு மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் புடைசூழ சென்னி மலைக் கோயிலுக்கு வருகை தந்து சென்னிமலைக் கோயிலை மட்டுமல்ல, ஆறுபடை வீடுகளில் உள்ள அனைத்துக் கோயில்களையும் மேம்பாடு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பெரும் தொகையை எடுத்துச் சொன்னார்கள்.

சென்னிமலைக் கோவிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கமாகத் தெரிவித்தார்கள். தமிழக அரசு அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்கும். அனைத்து வழிபாடு செய்கின்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சென்னிமலையை இழிவுபடுத்திப் பேசிய நபர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது என்பதனைச் செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தார்கள். இந்து அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தெளிவான விளக்கங்கள் இந்து முன்னணி பரப்பியிருந்த பொய்ப் பிரச்சாரத்தை முறியடித்து விட்டது.

தங்களது பொய்ப் பிரச்சாரம் முறியடிக்கப்பட்டு விடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த இந்து முன்னணிக் கும்பல் ஒன்று சென்னிமலைக் கோயிலுக்கு நுழைந்தது. அங்கு அமைச்சர்களின் வருகையோடு கலந்து கொள்வதற்குச் சென்றிருந்த என் மீது குறி வைத்துத் தாக்குவதற்கு முயற்சி செய்து அதற்கான வேலையில் திட்டமிட்டு ஈடுபட்டது. என் மீதான தாக்குதலுக்கு அவர்கள் என்னை நெருங்கிய போது என்னோடு நெருக்கமாக நின்று கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய தலைவர்கள் இந்து முன்னணிக் கும்பலைத் தடுத்து நிறுத்தி என்னைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர்களின் வருகையின் போது சென்னிமலை கோயிலில் வன்முறையில் ஈடுபட முயன்ற இந்து முன்னணியை சார்ந்த சதீஷ்குமார் என்பவர் மீதும் கத்தக்கொடி காட்டு வழக்கில் முதல் குற்றவாளியாக உள்ள சின்னசாமி என்பவர் மீதும் சென்னிமலைக் காவல் நிலையத்திலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் முறையாக புகார் செய்துள்ளோம்.

# தமிழ் சேவா சங்கம்.. ஆர் எசு எசு இன் புதிய சூழ்ச்சி..

● பொழிலன் ●

கடந்த அக்டோபர் நான்காம் நாள்...

காட்டுமன்னார் கோயிலுக்கு அருகில் ஆதனூர் என்னும் சிற்றூரில் ஐநூற்றுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பூணூல் அணிவித்திடும் நிகழ்ச்சியைக் குத்து விளக்கு ஏற்றித் தொடங்கி வைத்திருக்கிறார் ஆளுநர் இரவி..

தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பூணூல் அணிவிப்பதால் சாதியால் உயர்ந்துவிடுவதான மயக்கத்தில் அதை வாங்கி அணிந்து கொண்டனர் அடிமைகள் சிலர்..

பூணூல் போட்டு விட்டதால் இனிமேல் தாழ்த்தப்பட்டோர் கோயில் கருவறைக்குள் நுழைந்து விட முடியுமா..?

பூணூல் அணிந்து கொண்டதால் சங்கராச்சாரியாகப் பறையர் ஒருவர் வந்துவிட முடியுமா?

பார்ப்பனச் சாதியினர் பெண் கொடுத்துப் பெண் எடுத்துக் கொள்வார்களா? பார்ப்பனர்கள் பறித்து வைத்துள்ள அதிகாரங்கள் அனைத்தும் அனைவருக்கும் கிடைத்துவிடுமா?

இனி, தீண்டபடாத மக்கள் என்கிற ஒதுக்கப்பட்டு வாழும் நிலை மாற்றப்பட்டு குமுகத்தில் எல்லாரும் ஒன்றெனும் நிலை உருவாகி விட முடியுமா?

☐ என்றவாறெல்லாம் பல கேள்விகளை இயக்கத்தினர் மட்டுமல்லாது எளிய மக்களே கூட எழுப்பி வருகின்றனர்..

பூணூல் போட்டுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் 2000 உருபாய்ப் பணமும், தேவையான பொருள்களும் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள்.. பணத்திற்காகவும், பொருள்களுக்காகவும் பூணூல் போட்டுக் கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் பலர், நிகழ்ச்சி முடிந்தபிறகு பூணூலைக் கழட்டி வீசி விட்டிருக்கிறார்கள்.

திராவிடர் கழகம், பொதுவுடைமைக் கட்சிகள், வி.சி.க. உள்ளிட்டுப் பல கட்சிகளும் இயக்கங்களும் ஆளுநரின் போக்கைக் கடுமையாகத் திறனாய்ந்துள்ளன.. எதிர்த்துள்ளன..

ஆளுநர் அந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கருப்புக் கொடி காட்டிப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் பலர் சிறைபிடிக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்..

ஆளுநர் இரவி தன்னளவில் மட்டுமே சிந்தித்து இவற்றையெல்லாம் செயல்படுத்திடுவதில்லை..

அவர் இப்படியாகச் செயல்படுவதற்கான திட்டங்கள் அனைத்தையும் ஆர் எசு எசு நிறுவனமே கொடுத்து வருகிறது..

தமிழ்நாட்டில் மதக் கலவரங்கள் நடத்துவதற்குப் பெருமளவில் முயன்று இயலாமல் போகவே சாதிவெறி உணர்ச்சியைத் தூண்டி, பகைமைப்படுத்தி வளர்க்கிற வேலைகளைச் செய்து வருகிறது ஆர் எசு எசு..

எல்லா சாதிகளையும் பார்ப்பனியத்திற்கு அடிமைச் சாதிகளாகவும் பார்ப்பனிய முலாம் பூசுகிற வகையிலும் திட்டமிட்டு வேலை செய்கிறது ஆர் எசு எசு..

இடையர்களை, கோனார்களை – யாதவர்கள் என்பதும்..,

மீனவர்களை, செம்படவர்களை – பர்வத ராஜகுலத்தினர் என்பதும்..

பள்ளர்களை, குடும்பர்களை – தேவேந்திரர்கள் என்பதும்..

வன்னியர்களை, படையாட்சிகளை – சத்திரியர்கள் என்றவாறெல்லாம்

அவரவர்களின் அடையாளங்களை ஆரியச் சார்புபடுத்தி அந்தந்தச் சாதிக்குரிய தலைவர்களையெல்லாம் ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் அடிவருடிகளாக மாற்றி வந்திருப்பதைத் தமிழகம் அறிந்திருக்கிறது..

தமிழ்நாட்டில் ஆர் எசு எசு காலூன்றுவதற்கு என்னென்ன தகிடுதத்த வேலைகள் எல்லாம் செய்தன என்பது அறியப்பட வேண்டிய செய்திகள்..

1939இலேயே சித்பவன் பார்ப்பனர்களை தமிழ்நாட்டின் ஆர்.எஸ்.எஸ்.ஐத் தொடங்குவதற்காக ஈடுபடுத்தித் தோல்வி கண்டனர். 1940 மார்ச்சு 23இல் சேலத்தில் இந்து மகா சபை மாநாட்டை அங்குள்ள சௌராட்டிரர்களை வைத்து நடத்தினர். அதற்காகப் பல நாள்கள் சாவர்கர் தங்கியிருந்து வேலை செய்திருக்கிறார். பின்னர் தமிழ்நாட்டில் உள்ள சௌராட்டிரர்களையும், மராட்டியர்களையும் இணைத்துக் கொண்டு ஆர் எசு எசு இயங்கத் தொடங்கியது.

பஞ்சாபில் ஆர் எசு எசு கட்டுவதற்கு அவர்கள் உருவாக்கிய பெயர் இராஷ்ட்ரிய சீக்கிய சங்கம்..

சீக்கியர்களை ஏமாற்றி இழுப்பதற்குத் தாங்கள் ஏதோ சீக்கியர்கள் மீது அக்கறை கொண்டவர்கள் என்பதாக அடையாளப்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் இராஷ்டிரிய சீக்கிய சங்கம் என்று அமைத்தனர். சீக்கியர்களும் இந்துக்களும் ஒருவரே என்று பேசத் தொடங்கினர். ஆனால் அதைச் சீக்கியர்கள் புறந்தள்ளினர்..

2004 சூலை 23ஆம் நாள் சீக்கியத் தலைமையகம் ஆர் எசு எசு இன் தூண்டலில் நடைபெறும் இராஷ்ட்ரிய சீக்கிய சங்கம் தவறானது என்றும் ஆர் எசு எசு பின்புலத்தில் சூழ்ச்சியாக இயங்குவது என்றும் அதைத் தடை செய்தது.. 2009 இல் இராஷ்ட்ரிய சீக்கிய சங்கத் தலைவர் குண்டா சிங்கை காலிசுதான் இயக்கத்தினர் கொலை செய்தனர்.. ஆனாலும், தொடர்ந்து சீக்கியர்களை ஏமாற்றும் வகையில் ஆர் எசு எசு அங்குச் செயல்பட்டு வருகிறது..

மராட்டியத்தில் அம்பேத்கரை முன்னிறுத்தி சமச்சதா மன்ச் என்கிற அமைப்பை 1983 - இல் கட்டி அம்பேத்கர், எட்கேவர் இருவரும் ஒரே நாளில் பிறந்ததாகச் சொல்லி இருவர் படத்தையும் தேரில் வைத்துப் பேரணி நடத்தி ஏமாற்றி மகார் மக்களிடையே காலூன்றினர்..

அதே தன்மையில்தான் இன்றைக்குத் தமிழ் சேவா சங்கத்தை ஆர் எசு எசு திட்டமிட்டு உருவாக்கி இருக்கிறது..

ஆனால் சீக்கியர்கள் போல் அல்லாது, ஆரியப் பார்ப்பனிய அடிமையர்கள் சிலர் தமிழ் சேவா சங்கத்தை தூக்கிக் கொண்டு ஆடுகின்றனர்.. சங்கம் திட்டமிட்டுக் கொடுத்ததன்படி பறையர் குலத்தினர் சிலர் அந்த நிகழ்ச்சி தமிழ் சேவா சங்கத்தின் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததாக விளம்பரப்படுத்தி இருந்தனர்..

பல செய்தித்தாள்களில் எல்லாம் விளம்பரங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருந்தன..

டி எசு எசு - என்ற பெயரில் விளம்பரப்படுத்தப்படும் தமிழ் சேவா சங்கம் என்பது ஆர் எசு எசு இயக்கத்தின் கிளை அமைப்பாகவே திட்டமிட்டுச் செயல்பாட்டைத் தொடங்கி இருக்கிறது..

தமிழ் சேவா சங்கத்தை மும்பையில் இருந்து தொடங்கி வைத்தவர் **ஸ்ரீதர் வேம்பு** என்கிற **தஞ்சாவூர் பார்ப்பனர்**.

2010 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை மிக எளிய நடுத்தர நிலையில் பொருளியலால் வாழ்ந்து வந்த ஸ்ரீதர் வேம்பு, பாஜக ஆட்சிக்குப் பின்னர் பல்வேறு வகையில் அரசிடம் பணம் பெற்று, பல வாய்ப்புகளின் வழி கிடுகிடுவென இன்றைக்குக் குறிப்பிடத்தக்க பணக்காரர்களின் வரிசையில் நிற்கிறார்..

ஆர் எசு எசு இன் வழிகாட்டலில் செயல்படும் தீவிர ஆரியப் பார்ப்பன வெறியர் அவர்.. தென்காசிக்கு அருகில் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை ஆர்.எசு.எசு. இடமிருந்து 'மங்கல'மாக நிலங்களைப் பெற்றுப் பலரைப் பார்ப்பனிய நஞ்சூட்டி வளர்த்து வருகிறார்..

மும்பையில் செயல்பட்டு வரும் **ஆதிதிராவிட மகாசன சபை**யின் பொதுச் செயலாளர் **மாறன் நாயகம், சிவ குலத்தார்** என்கிற பெயரில் **தங்க மாமுனி**, பாஜக பட்டியலினப் பிரிவுத் தலைவர் தடா பெரியசாமி உள்ளிட்டவர்களின் அணிதிரட்டலில் 500க்கும் மேற்பட்டோருக்குப் பூணூல் போடுகிற நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறது தமிழ் சேவா சங்கம்..

ஸ்ரீதர் வேம்பு ஐயரின் வழிகாட்டலில், பாமக வழி ஆர் எசு எசு-க்கு வந்த **ஞான சரவணவேல்** பொறுப்பில், ஆர் எஸ் எஸ் உறுப்பினராக இருந்த ஓய்வு பெற்ற கல்வித்துறை அதிகாரி **அ. பாவேந்தன்** அமைப்பாளராக இருக்க மேற்படி தமிழ் சேவா சங்கம் இயக்கப்படுகிறது..

தொடக்கத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்தவர்களான மாறன் நாயகம், தங்கமணி, தடா பெரியசாமி போன்றவர்களே தமிழ் சேவா சங்கத்தின் எடுபிடிகளாக இருந்து அதை வழி நடத்துகிறார்கள்..

நாடார்களைத் திரட்டுவதற்காக இந்து முன்னணியையும், பொன். இராதாகிருஷ்ணனையும் பயன்படுத்தி வருவது போல்..

முக்குலத்தோர்களைத் திரட்டுவதற்காகத் தமிழ்நாட்டில் சிவ சேனையைப் பயன்படுத்தி வருவது போல்,

பள்ளர் குல மக்களைத் திரட்டுவதற்காக மருத்துவர் கிருஷ்ணசாமி ஜான் பாண்டியனைப் பயன்படுத்துவது போல்...,

அருந்ததியர்களைத் திரட்டுவதற்காக முருகனைப் பயன்படுத்தி வருவது போல்,

கொங்கு மக்களைத் திரட்டுவதற்காக வானதி உள்ளிட்டுப் பலரைப் பயன்படுத்தி வருவது போல்,

பறையர்களைத் திரட்டுவதற்காக ஆர் எசு எசு-க்குக் கிடைத்தவர்களே மாறன் நாயகம், தங்கமணி, தடா பெரியசாமி போன்றவர்கள்..

தமிழ் சேவா சங்கம் அதற்காக ஆர் எசு எசு-க்குப் பயன்படுகிறது..

தமிழை வளர்ப்பதற்காகவோ, தமிழ்நாட்டை ஈடேற்றுவதற்காகவோ, தமிழ்நாட்டின் புறந்தள்ளப்பட்ட பறையர் குல மக்களைச் சாதியக் கொடுமைகளிலிருந்து மீட்பதற்காகவோ, சாதியை ஒழிப்பதற்காகவோ செயல்படுகிற இயக்கமில்லை என்று அடித்தட்டு மக்களும் தமிழ் உணர்வாளர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்..

வல்லரசு நாடுகளின் முதலாளிகளாலும் அம்பானி அதானி உள்ளிட்ட இந்தியப் பெரு முதலாளிகளாலும் கொடுமையான சுரண்டல் சூறையாடல்களால் நசுக்குண்டுப் போயிருக்கிற நடுத்தர அடித்தட்டு மக்களுக்குப் பணங்களை வாரி இறைத்து வாய்க்கரிசி போடுவது போல் ஏமாற்றி அணி திரட்டி வருகிறது ஆர் எசு எசு

.அதன் பரிவாரங்களாகச் செயல்படும் பாஜக, விஷ்வ இந்து பரிஷத், ஏ பி வி பி, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட பரிவாரங்களின் வரிசையில் தான்

இன்றைக்குப் புதிதாய்த் தமிழ் சேவா சங்கம் என்கிற நஞ்சு மரமாக வளர்க்கப் படுகிறது..

எளிய மக்களை உழைக்கும் மக்களைச் சாதியால் கூறு பிரித்துப் பகைமைப்படுத்துவதன் மூலம் பார்ப்பனியம் குடுமி விரித்து ஆடுகிறது..

வடநாடுகளில் மதக் கலவரங்களை உருவாக்கி விட்டு வெறித்தனத்தைத் தூண்டுகிற ஆர் எசு எசு பாஜகவினருக்குத் தமிழ்நாட்டில் அத்தகைய வழியில் செயல்படுவது கடினமாகப் போனதால்.. சாதிய வெறித்தனங்களைத் தூண்டுகிற வேலையைச் செய்து வருகிறது..

ஆர் எசு எசு, பாஜகவின் இத்தகைய போக்குகளைத் திமுக உள்ளிட்ட தேர்தல் அரசியல் கட்சிகள் சரியான கோணத்தில் விளங்கிக் கொண்டதாகவோ, எதிர் நின்று அவற்றை வீழ்த்துவதற்காகத் திட்டமிட்டதாகவோ அறிய முடியவில்லை..

திராவிட மாடல் என்று திமுக அடையாளப்படுத்துவது ஆர் எசு எசு-ஐ முழுமையாக எதிர்ப்பதற்காகவோ, பார்ப்பனியத்தை, சாதியத்தை வேரோடு வெட்டி வீழ்த்துவதற்காகவோ திட்டமிட்டிருப்பதாகத் தெரியவில்லை..

கொள்கை அளவில் திராவிட மாடல் என்பது என்ன என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு வெளியீடாகக் கூட கொண்டு வரவில்லை.. அதற்கான அரசியல் பயிற்சிகள் பெரும்பாலான அமைச்சர்களுக்கே தேவைப்படுகிறது..

திமுக என்கிற அடையாளத்தில் ஆரியப் பார்ப்பனியத்தின் அடிவருடிகளாகவே, சாதிய வெறி உணர்வின் வித்துக்களாகவே பலர் திமுகவின் பொறுப்புகளில் இருப்பதை இயல்பானவர்கள்கூட உணர்ந்து கொள்ள முடியும்..

கொஞ்சநஞ்சம் கொள்கையைப் பேசிக் கொண்டிருக்கிற திமுக-வே அப்படி என்றால் அதிமுகவையோ, பாமகவையோ தனித்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை.. ஆர் எஸ் எஸ் எளிதே நுழைந்து விளையாடுகிற களம் ஏற்படுத்தித் தந்திருக்கின்றன அதி.மு.க.வும், பாமகவும்..

ஜான் பாண்டியனும், கிருஷ்ணசாமியும் மொத்தமாகப் பள்ளர் குல மக்களை வாரி வழித்து ஆர் எசு எசு, பாஜகவினருக்கு விலை பேசி வருகின்றனர்..

மதிமுக, விசிக கட்சிகளின் தலைவர்களிடம் இருக்கும் எச்சரிக்கை தொண்டர்கள் வரை இன்னும் சொன்னால் மாவட்டப் பொறுப்பாளர்கள் வரையளவில் கூட இருக்கவில்லை..

பார்ப்பனியம் என்பது ஏதோ பாஜக-வாக மட்டுமே என்று புரிந்து கொள்ளுகிற அரசியலைத்தான் அவர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.. வாழ்வியல் நடைமுறைகளில், அரசியல் அதிகாரங்களில், பொருளியலில், மொழிப் பயன்பாடுகளில், கல்வித் துறைகளில் என எல்லாவற்றிலும் அதிகாரம் செலுத்தி வருகிற பார்ப்பனிய அதிகாரப் போக்குகளை எதிர்ப்பதற்கான அரசியல் தெளிவாகப் பயிற்றுவிக்கப்படவில்லை.. அதற்கானத் திட்டங்களும் அவர்களிடமெல்லாம் இருப்பதாகத் தெரியவில்லை..

இத்தகைய அவலமான சூழலில் இந்தியாவிற்குள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிற இனங்களை எல்லாம் அடையாளம் தெரியாமல் நசுக்கிவிட்டு இந்தியப் பார்ப்பனியம் ஆழமாக காலூன்றி வந்திருக்கிற வகையில் ஆர் எசு எசு செயல்பட்டுக் கொண்டிருப்பதை இவர்கள் உணரவில்லை..

எனவே, ஏதோ பாஜகவை எதிர்ப்பதால் மட்டுமே பயனில்லை. பார்ப்பனியத்தை வேரோடு வீழ்த்தாமல் பாஜக வீழப்போவதில்லை.. அப்படியாக பாஜக-வை வீழ்த்தவும் முடியாது.

பார்ப்பனியத்தை வீழ்த்துவதற்கான அரசியல் தெளிவைத் தேர்தல் கட்சிகள் முன்னெடுக்கத் தயங்குகிற இந்தச் சூழலில் பார்ப்பனியத்தை முழுமையாக வேரறுத்து தேசிய இனங்களின் உரிமைகளை உயர்த்தி நிறுத்துகிற எழுச்சியைப் பொது மக்களும் இயக்கங்களுமே செய்தாக வேண்டும்..

அத்தகைய நிலையை இன்றைக்கு இருக்கிற தமிழ்த்தேசிய இயக்கங்கள் என்று பெயரளவில் சொல்லிக் கொண்டிருக்கிற இயக்கங்கள் செய்வதாகத் தெரியவில்லை

பார்ப்பனியம் என்பது இந்திய அரசியல் அதிகாரத்தோடு இணைந்தது.. அம்பானி அதானி உள்ளிட்ட பெரு முதலாளிகளின் சுரண்டல் அதிகாரத்தோடு இணைந்தது.. வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டல் சூறையாடல்களோடு உறவு கொண்டது..

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் குறிப்பாகத் தென் மாவட்டங்களில் ஊருக்கு ஊர் திட்டமிட்டுக் கட்டப்பட்டு வரும் கோயில்களும், இந்து மதத்தின் பெயரிலான இயக்கங்களும் ஏதோ பார்ப்பனர்களின் தூண்டுதல்களோடு பாஜக, இந்து பரிவாரங்களின் தூண்டல்களோடு மட்டுமே நடப்பதில்லை.. அவற்றுக்குப் பின்புலமாக அம்பானி அதானி மட்டுமன்றி பன்னாட்டு முதலாளிகளும் உண்டு.. இந்திய அரசு அதிகாரமும் முழுப் பின்புலமாக இருக்கிறது..

எனவே அவற்றில் எல்லாம் பார்ப்பனிய அரசியல் அதிகாரம் உள்ளடங்கி இருக்கிறது..

வீட்டுச் சடங்குகள் விழாக்கள் உள்ளிட்டுக் கோயில் குடமுழுக்குகள் எல்லாம் பார்ப்பனர்களை வைத்து நடத்துவது, சமசுகிருதத்தில் நடத்துவது என்பவற்றுக்குள்ளும் பார்ப்பனிய அதிகார அரசியல் உள்ளடங்கி இருக்கின்றது..

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டப்படுவதிலேயே அந்தப் பார்ப்பனிய அரசியல் உட்புகுந்து விடுகிறது..

பார்ப்பனியத்தை எதிர்ப்பது என்பது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதில் தொடங்கி இந்தியப் பார்ப்பனிய அரசு அதிகாரத்தை முறியடிப்பது வரை செய்யப்பட வேண்டிய வேலைகளாக அமைகின்றன.. சாதிய ஆணவங்களை அழித்தொழிப்பதோடான வேலையைக் கொண்டது.

அம்பானி, அதானியை வீழ்த்துவதும், அவர்களின் சூறையாடல் சொத்துகளைப் பறிமுதல் செய்வதும் முதன்மையாகின்றது.

பன்னாட்டு முதலீடுகளைப் பறிமுதல் செய்து மக்களாட்சிச் சொத்தாக மாற்றுவது.. உள்ளிட்ட வேலைகளைச் செய்தாக வேண்டி இருக்கிறது..

இவை எவற்றிலும் இலக்குகளில் குறைந்து போகவோ, இணங்கிப் போகவோ இயலாத நிலை இருந்தால்தான் பார்ப்பனியத்தை வீழ்த்த முடியும்..

பார்ப்பனியத்தை வீழ்த்துகிற போராட்ட வழித்தடத்தில்தான் ஆர் எஸ் எஸ் ஐ, பாஜகவை, அதன் பரிவாரங்களை வேரறுக்க முடியும்..

அத்தகைய வழித்தட நோக்கத்தில்தான் மொழிமாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.. உரிமைகள் உள்ள மொழி மாநிலங்களின் ஒன்றியமாக இந்திய ஒன்றிய அரசை படைக்க முடியும்..

அப்படி அல்லாது.. வாய் வீச்சில் சனாதனம் ஒழிப்போம் என்பதும் பின்னர் சந்து பொந்துகளில் முடங்கிக் கொள்வதும்.. பார்ப்பனிய வருணாச்சிரமப் பூணூலின் ஓர் இழையைக்கூட அறுத்து விடாது..

ஆர் எசு எசு_ ஐ, ஆரியப் பார்ப்பனியத்தை வீழ்த்துவதற்குத் திட்டமிட்ட வகையில் தமிழ் உணர்வாளர்கள், பெரியாரிய உணர்வாளர்கள், அம்பேத்காரிய, மார்க்சிய உணர்வாளர்கள் மேற்படி வகையில் அணிசேர்ந்தாக வேண்டும்.. போர்க்கால அடிப்படையில் செயல்பட்டாக வேண்டும்.

## இசுரேலே காசா மீதான தாக்குதலை நிறுத்து !

இட்லர்தான் முன்னெடுத்த இனவழிப்பால் தப்பிவந்தார்
இங்கிலாந்தால் பாலத்தீன் நாட்டினிலே குடியமர்த்தி
விட்டதனால் உருவான இசுரேலாம் நாடன்று
விரட்டியடித் தடுவாமுள் ளூர்பாலத் தீனியரை !
ஒட்டகந்தான் கூடாரம் நுழைந்ததை ஆனதுவாம் !
உள்ளூரில் பாலத்தீ னரபுமக்கள் நாடிழந்தார் !
வெட்டவெளிச் சிறைச்சாலை மேற்கரையில் காசாவில்
வெறிகொண்ட விசுரேலால் விலங்குகள்போல் வாழலுற்றார்!

அடிமைகளை ஒடுக்கிடவே அரசவிழ்க்கும் வன்முறையை
அமெரிக்கா ஏகாதி பத்தியத்தார் கண்டுகொள்ளார் !
அடிமையல்லார் சியோனிசத்தை எதிர்த்துத்தான் கிளர்ந்தெழுந்தால்
அவரெல்லாம் அச்சுறுத்தும் பயங்கரத்தின் வாதியென்பார் !
குடிகெடுப்பார் ஊதுகுழல் கூக்குரலைக் கேட்கின்றோம்
கொடிபிடிப்பார் போர்க்குரலில் கோட்டைகளை எச்சரிப்போம் !
வெடிசுமக்கும் கப்பலெல்லாம் விடுதலையைத் தடுத்திடுமோ ?
விளங்காத வீணரிவர் வரலாற்றை அறிவாரோ ?

ஆக்கிரமிப் பாளன் நீ ! இசுரேலே வெளியேறு !
ஆக்கமுடன் யூதயினத் தொழிலாளர் அரபுமக்கள்
ஊக்கமுடன் ஓரணியில் கொள்கையிலே ஒன்றுபட்டால்
ஓயாமல் தொல்லைதரும் சியோனிச வரசுவீழும் !
கூக்குரலாய் மத்தியத்துக் கிழக்கினிலே எழுந்துவரும்
கோரிக்கை சோசலிசக் குடியரசாய் மலர்ச்சியுறும் !
தீக்குணத்தால் இசுரேலும் அரபுமுத லாளியமும்
தீட்டுகின்ற நரித்தனத்தைத் தோலுரித்துக் காட்டிவிடும் !

**சோ. ஆற்றலரசு**

### தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்

| | |
|---|---|
| தோழர் விமலாதித்தன், சென்னை | 200 |
| திரு. தேனியல் செபராசு | 1000 |
| திரு. பெயர் பதிய விரும்பாத ஓர் அன்புள்ளத்தினர், சென்னை | 5000 |
| திரு. கோ. பிச்சைவள்ளிநாயகம் | 1000 |
| திரு. தென்முகநம்பி, சென்னை | 500 |

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005

# அறநெறி பரப்பும் குறள்நெறி விழா..

## திருக்குறள் பேரவையம் தொடக்க மாநாடு!

### திண்டுக்கல்லில்..

### திபி 2025 சுறவம் 13, காரிக்கிழமை அன்று.. ( 27-1 - 2024 அன்று..)

தொடர்புக்கு:

9444440449, 9941492701, 9952055085, 8608068002

வானுயர்ந்து நிற்கும் வள்ளுவரைச் சாதி, சமயங்களுக்கு ஆட்படுத்தாமல் உயர்த்திக் காட்டிட..

குடிசெயல்வகைவழி அடுத்தூன்றும் தலைமுறைக்கு வழிகாட்டிட..

அறிவையும் கல்வியையும் அனைவருக்கும் உரியவையாய்ப் பொதுமையாக்க வலியுறுத்தும் குறளைத் தமிழ்நாட்டின் தேசிய நூல் என உயர்த்தி நிறுத்திட....

உயிர்களெல்லாம் ஒன்றென உலகெலாம் பரப்பிட..

தமிழ்கூறும் நிலமெல்லாம்.. குறளறத்தை நிலைநிறுத்திட..

அறநெறி பரப்பும் குறள்நெறி விழா..

இந்தியப் பார்ப்பனியச் சனாதனத்திற்கு மட்டுமின்றிச் சாதி, சமயங்களுக்கே நேர் எதிரான திருக்குறளைத் தமிழ்நாட்டின் தேசிய ஒளிவிளக்காய் ஏற்றிடுவோம்!... அதன் ஒளிப்பாய்ச்சலில்... சாதிய அழுக்குகள் அழியட்டும்!

திருவள்ளுவ அற உணர்வில்,
தமிழ்த்தேசிய நெறி உணர்வில்
திருவள்ளுவரை ஏந்துவோம்...! திருக்குறளைப் பரப்புவோம்..!

தமிழிய உணர்வாளர்கள்.. பொதுமை உணர்வாளர்கள்..
அனைவரும் அணி திரள்வோம்! அணியமாகுங்கள்..

- அழைக்கிறது திருக்குறள் பேரவையம்

முனைவர் மா. பூங்குன்றன்
முதன்மை ஒருங்கிணைப்பாளர் (9444440449)

மாநாட்டு அமைப்புக் குழுத் தலைவர்:
திரு. கழராம்பன் (9840202911)
மாநாட்டுப் பொருளாளர் :
திரு. ச. சிவகுமார் (99423 04622)

# திராவிடத்தின் நீட்சியே தமிழ்த்தேசியம்

**தங்க. குமரவேல்**
தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்.

வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல் ஆய்வுத் தந்தை என்று போற்றப்படும் இராபர்ட் புருசுஃபூட் 1863-இல் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த அத்திரம்பாக்கம் என்னும் இடத்தில் பழைய கற்காலக் கருவிகளைக் கண்டறிந்தார். சென்னை - பல்லாவரத்தில் பழைய கற்கால கற்கோடரியைக் கண்டார். நம்முடைய பழைமையை நமக்கு உணர்த்திய தொல்லியல் ஆய்வாளர் ராபர்ட் புருசுஃபூட் (22.09.1834 - 29.12.1912) ஒரு பிரித்தானியர் ஆவார். அவரை நாம் இனவாதக் கண்கொண்டு பார்ப்பது அறிவுடைமை யாகுமா?

"திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் நூலை எழுதி நாமெல்லாம் ஆரியர் அல்லாத வேறு இனத்தவர் என்பதை நமக்கு உணர்த்தியதோடு தமிழில் இருந்துதான் மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு உள்ளிட்ட மொழிகள் தோன்றின என்னும் உண்மையை நமக்கு உணர்த்திய இராபர்ட் கால்டுவெல் (07.05.1814 - 28.08.1891) ஓர் அயர்லாந்துக்காரர். அவரைத் தமிழர் சார்பினர் அல்லர் என்று ஒதுக்கினால் அது மடமை அன்றோ?

தமிழுக்குப் புதிய அகராதியைத் தந்தவரும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவரும் 23 நூல்கள் எழுதியவரும் பரமார்த்த குரு கதைகள் மூலம் தமிழ் உரைநடைக்கு வித்திட்டவருமான வீரமாமுனிவர் என்று அன்போடு அழைக்கப்பட்ட கான்ஸ்டான்டினோ கியூசெப் பெஸ்கி இத்தாலிக்காரர். அவரை நம் இனத்தவர் அல்லர் என்று சொல்வது இனவெறியைத் தவிர வேறில்லை.

ரிக் வேதத்திலும் உபநிடதங்களிலும் உள்ள தத்துவங்களில் திராவிட ரிக், திராவிட உபநிசத் என்னும் அடிக்குறிப்புகளோடு காணப்படும் கருத்துகள் தமிழரின் மெய்யியல் கருத்துகளேயாகும். இதில் கூறப்படும் திராவிட என்பது தமிழை மட்டுமே குறிக்கும். ஏனெனில் ஆரியர்கள் வந்தேறிகளாக நுழைவதற்கு முந்தைய காலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் தோன்றவில்லை. அதனால் தமிழைக் குறிக்கும் சமசுக்கிருதச் சொல்லே திராவிடம் என்பது ஆகும். திராவிடம் வேறு தமிழ் வேறு என்று கருதுவது தவறானது.

வச்சிரநந்தி என்பவர் கி.பி.470 - இல் மதுரையில் "திரமிள சங்கம்" என்பதை ஏற்படுத்திச் சமண சமயத்தையும் தமிழையும் வளர்த்தார். அவர் கூறும் திராவிடம் என்பது தமிழைக் குறிக்கும். மேலும் சமணம் என்பது தமிழர் மெய்யியலான ஆசீவகத்தில் இருந்து தோன்றியது. இது பொருள்முதல்வாதக் கொள்கையாகும்.

திராவிட சங்கத்திற்கு "திரமிள சங்கம்" என்று மற்றொரு பெயர் உண்டு. என்பது தமிழையே குறிக்கும்.

திராவிட இனம் என்பது மரபினமாகும். அது ஆசியா, ஆப்பிரிக்கா உள்ளிட்ட கண்டங்களில் பரவி வாழும் பேரினம். அந்தப் பேரினத்திற்குப் பல்வேறு தாய் மொழிகள் உண்டு. அவை மொழிவழித் தேசங்களாக உள்ளன. திராவிடப் பேரினத்தின் அனைத்து மொழிகளும் தமிழிலிருந்து உருவானவையே.

நம்மைப்போன்று ஆரிய இனம், காக்கேசிய இனம் உள்ளிட்ட ஐரோப்பிய இனங்கள் பல தாய்மொழிகளைக் கொண்டவை. அவை இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம் எனப்படும். இந்திய மொழிகளில் சில இந்தோ - ஐரோப்பிய வட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை. சமஸ்கிருதமும் அதில் ஒன்று. இந்தோ - ஐரோப்பிய மொழிகளைப் பேசும் பல்வேறு மொழிவழித் தேசங்கள் உள்ளன.

மரபினத்தில் ஆரியராகவும் சமஸ்கிருதத்தைத் தாய் மொழி என்று சொல்லிக்கொள்ளுபவர்களுமான பார்ப்பனர்களைத் தமிழர்கள் என்று தமிழ்த் தேசியர்கள் ஏற்பதும் மரபினத்தில் திராவிடரும் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவரும் "தமிழ்நாடு தமிழருக்கே" என்றும் "தமிழா! இனவுணர்வுகொள்!" என்றும் முழங்கி வாழ்க்கையையே தமிழர்களுக்காக அர்ப்பனித்த தந்தை பெரியாரைக் கன்னடர் என்று காழ்ப்புணர்ச்சியோடு வெறுத்து ஒதுக்குவது முழுக்க முழுக்க ஆரியத்திற்கே அடிவருடும் செயலாகும்.

நம்மைத் தலைநிமிர வைக்கும் சொல் எந்த மொழியில் இருந்தாலும் அது ஏற்புடையதே. நம் தன்மானத்திற்கு இழுக்கான தலைகுனிய வைக்கும் சொல் நம் தாய் மொழியிலேயே இருந்தாலும் அது ஏற்புடையது அல்ல. தமிழுக்கும் தமிழர்களுக்கும் தொண்டுபுரியும் எந்நாட்டவர் ஆயினும் எம் மொழியினர் ஆயினும் அவர் நம்மவரே! தமிழுக்கும் தமிழருக்கும் தீங்கு விளைவிக்கும் தமிழர் ஆயினும் அவர் அயலவரே!

சாதிவெறியையும் மொழிவெறியையும் வளர்க்கும் தமிழ்த்தேசியம் வலதுசாரி தமிழ்த்தேசியமே! தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் நீட்சியே தமிழ்த் தேசியமாக இருக்க வேண்டும். திராவிடத்தை மறுக்கும் தமிழ்த்தேசியம் ஈடேற வாய்ப்பே இல்லை!